விலை ரூபா: 5.00 பக்கங்கள் எட்டு Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 மாசி 25 சனிக்கிழமை (09.03.2002) தொலைபேசி 3378 ஒலி 80

லக்ஷறி
பல்கட்டும் இடம்
LUXURY
DENTAL
WORKS
சிங்கப்பூர் நுட்பமுறையில் சங்குப்பற்கள் கட்டுதல் கிளிப் போடுதல் குறைந்த கட்டணத்தில் செய்து கொடுக்கப்படும்.
குளப்பிட்டி - ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

## நேற்று அதிகாலை வேளை

# பலாலி-கட்டுவன் ஆயுத களஞ்சியத்தில் தீவிபத்து

## ஆயுதங்கள் வெடித்துச் சிதறின

(நமது நிருபர்)

**பலாலி இராணுவத்தளத்திற்கு சமீபமாகவுள்ள கட்டுவன் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த ஆயுதக் களஞ்சியத்தில் நேற்று அதிகாலை 4.45மணியளவில் ஏற்பட்டுள்ள திடீர் தீவிபத்தினால் பெருமளவான ஆயுததளபாடங்கள் வெடித்து சிதறியதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத்கருணாரத்னா தெரிவித்துள்ளார்.**

நேற்று அதிகாலை 4.45மணியளவில் கட்டுவன் பகுதியில் வழக்கொழிந்த ஆயுதங்கள் வைக்கப்பட்டிருந்த களஞ்சியத்தில் ஏற்பட் இத் தீவிபத்தினால் ஆயுதங்கள் வெடித்துச் சிதறின.

இவ் வெடிச்சத்தம் சுமார் ஒரு மணித்தியாலம் வரை கேட்டது.

அதிகாலைவேளை ஏற்பட்ட இச்சம்பவத்தினால் வெடிவிபத்து இடம்பெற்ற இடத்தை அண்டிய பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவியதாகவும் மக்கள் பயப்பீதியுடன் காணப்பட்டதாகவும் பிராந்தியச் செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

இவ்வெடி விபத்துச்சம்பந்தமாக இராணுவப் பேச்சாளர்

(2ம் பக்கம் பார்க்க)

## புளொட் ஒப்படைத்த ஆயுதங்கள்

(கொழும்பு)

யாழ் மாவட்டத்தில் புளொட் அமைப்பு இராணுவத்திடம் ஒப்படைத்த ஆயுத விபரங்களை அரச தகவல் திணைக்களம் நேற்று அறிக்கை மூலம் வெளியிட்டுள்ளது.

ரீ56ரக துப்பாக்கிகள்-28, அதற்கான தோட்டாக்கள்-3090 ரீ56மகசீன்கள்-113, சீன உறைகள்-07, றைபிள் பட்டிகள் -07 இவற்றுடன் 56ஸ்ரீ2093 என்ற இலக்கமுடைய வாகனமும் புளொட் இயக்கத்தினரால் யாழ் படைத் தலைமையகத்தில் கையளிக்கப்பட்டதாக அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந.4)

### தலைமன்னார்-குறிகட்டுவான்

## கப்பல்சேவை எதிர்வரும் 15 திகதி ஆரம்பம்

(கொழும்பு)

தலைமன்னாருக்கும் குறிகட்டுவானுக்கும் இடையில் எதிர்வரும் 15ந் திகதிமுதல் கப்பல் சேவை இடம்பெற உள்ளது.

150பேர் பயணம் செய்யக் கூடிய இந்தக் கப்பலில் ஒரு வழிப் பயணக்கட்டணமாக 950 ரூபாவை செலுத்தவேண்டும்.

இந்தக் கப்பல் தலைமன்னாரில் இருந்து இரண்டரை மணி நேரத்தில் குறிகட்டுவானை வந்தடையும் என்பது குறிப்பிடத்தக்கது. (உ.5)

### சிங்கள இனவாதிகளின்

## கைப்பொம்மைகளான பல்கலை மாணவர்கள்

(கொழும்பு)

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிராக திடீர் திடீர் என்று கொழும்பு வீதிகளில் முளைக்கும் ஆர்ப்பாட்டங்களில் ஒன்று பற்றிய சுவையான செய்தி இது.

கடந்த செவ்வாயன்று பிற்பகல் 2மணியளவில் கொழும்பு பல்கலைக்கழக மாணவ மாணவிகள் வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். தமது போராட்டத்துக்கு ஆதரவு தருமாறு மாணவிகள் பதாதைகளுடன் களத்தில் நின்றனர் மாணவர்கள் வீதிக்குக் குறுக்கே படுத்துச்சாலை மறியலில் ஈடுபட்டனர். அவ்வேளை அங்கே வந்த பிரபல சமூக சேவையாளர் ஒருவர் தனது வாகனத்தை விட்டிறங்கி போராட்டத்துக்கு தலைமைதாங்கிய மாணவனை அணுகி போராட்டத்தின் நோக்கங்களை வினவியபோது ''யுத்தத்தின் மூலந்தான் புலிகளை ஓரங்கட்ட முடியும்''

(2ம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டுக்கான தரைப்பாதை உடன் திறக்கப்பட வேண்டும்

### யாழ் ஆயர் பிரதமருக்கு அவசர கடிதம்

(யாழ்ப்பாணம்)



யாழ் குடாநாட்டுக்கான தரை வழி ஏ-9 வீதியை மக்கள் பாவனைக்கு வசதியாக உடனடியாக திறக்கநடவடிக்கை எடுக்குமாறு யாழ் ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி ஏ-9 கண்டி தரைவழிப்பாதையை உடன் திறக்கும்படி யாழ் மக்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறேன். எனும் தலைப்பில் ஆயர் கடிதம் ஒன்றை பிரதமருக்கு நேற்று பக்ஸ் மூலம் அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தில் யாழ் மக்கள் பாதை எப்போது திறக்கப்படும் என ஆதங்கப்படுவதாகவும், நிரந்தர போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு, சமாதான நடவடிக்கைகளை ஆரம்பித்தமையை தாம் வரவேற்பதாகவும், பாதை திறப்பு விடயத்தில் இராணுவத்தினர் தயக்கம் காட்டுகிறார்கள் என்பதையும் அறியும்பொழுது வேதனையும் குழப்பமும் அடைந்துள்ளதாகவும், தெரிவிக்கப்பட்டிருப்பதுடன் உடனடியாக பாதை திறப்பு நடவடிக்கையில் அரசு ஈடுபட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ.223)

### திருமலையில் பொங்குதமிழ்

(கொழும்பு)

திருகோணமலையில் எதிர்வரும் 19 ம் திகதி செவ்வாய்க்கிழமை பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுகள் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொங்குதமிழ் நிகழ்வு நடைபெறும் தினமன்று காலை மூன்று பேரணிகள் திருகோணமலை பெரிய முற்றவெளியை வந்தடையவுள்ளது.(செ)

### க.பொ.த[சா.த] பரீட்சைப் பெறுபேறு காலதாமதமாகும்

'கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த(சா.த) பரீட்சை முடிவுகள் வெளியிடுவதில்' காலதாமதம் ஏற்படலாம் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள மின்சார நெருக்கடியே இதற்கு காரணமென பதில் பரீட்சை ஆணையாளர் டபிள்யூ. ஏ.மகிந்த விஜயஸ்ரீ தெரிவித்துள்ளார். (ந.4)

## புரிந்துணர்வு ஒப்பந்த வழக்கு 18ந் திகதிக்கு ஒத்திவைப்பு

### பிரபா சார்பில் சட்டத்தரணிகள் ஆஜராகவில்லை

(கொழும்பு)

அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை ரத்துச் செய்யுமாறு கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு இம் மாதம் 18ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கையை ரத்துச்செய்யுமாறு கோரி கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் ஜே.வி.பி வழக்குத் தாக்கல் செய்திருந்தது. இவ்வழக்கில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, முதலாவது பிரதிவாதியாகவும் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இரண்டாவது பிரதிவாதியாகவும் குறிப்பிடப்பட்டிருந்தனர்.


இவ்வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது

(2ம் பக்கம் பார்க்க)

## புளொட்டின் ஆயுத ஒப்படைப்பு கூட்டமைப்பில் இணைவதற்கு அல்ல

### சித்தார்த்தன் எம்.பி பேட்டி

(லண்டன்)



யாழ் மாவட்டத்தில் எமது அமைப்பு ஆயுதங்களை ஒப்படைத்தமைக்கும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் இணைவதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என வன்னிப்பாராளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ் மாவட்டத்திலுள்ள புளொட் அமைப்பு ஆயுதங்களை இராணுவத்தினரிடம் ஒப்படைத்தமை தொடர்பாக லண்டன் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில் கட்சிகள் ஆயுதங்கள் ஒப்படைக்கும் விடயம் என்பது அரசினால் ஏற்படுத்தப்பட்ட தற்கால நடவடிக்கை ஆனால் எமது அமைப்பு தமிழ்த்

(2ம்பக்கம் பார்க்க)

### இராணுவ உடையில் வந்த திருடன் அகப்பட்டான்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதி பன்றிக்கோட்டு பிள்ளையார் கோவில் பகுதியில் இராணுவச் சீருடையில் வந்த திருடன் ஒருவன் அப்பகுதி வர்த்தகர்களிடம் மிரட்டிப் பணம்பறிக்க முற்பட்ட வேளையில் அப்பகுதி இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டான்.

நேற்றிரவு 8.30 மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பிடிக்கப்பட்ட பிரஸ்தாப திருடனை இளைஞர்கள் தட்டா தெருவிலுள்ள இராணுவத்தினரிடம் ஒப்படைத்தனர்.

இராணுவத்தினர் அந்நபரை அவர் வைத்திருந்த வாள்,கத்தி என்பவற்றையும் கைப்பற்றி யாழ் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.(இ)

## சிறு விளம்பரம்

### தேவை

எமது ஸ்ரூடியோ கிளை பிரிவுகளுக்கு போட்டோப் படப்பிடிப்புதெரிந்தவர்களும் பயிற்சியாளர்களும் தேவை இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். யாழ் தேவா ஸ்ரூடியோ 424'3 கே.கே.எஸ்வீதி யாழ்ப்பாணம். (4801)

### தேவை

பிளேட்டன் மெசின் ஒமன்டர், பைண்டிங்வேலை தெரிந்த பெண்பிள்ளைகள்தேவை நேரில்வரவும். சரவணா அச்சகம், 233 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். (சி3687)

### தவறிவிட்டது

அச்சுவேலி தெற்குசிவசக்தி கோவிலடியைச் சேர்ந்த துவாரகை மலர் குமாரசாமி என்பவருடைய **Diploma in Agriculture** சான்றிதழ் 05. 03. 2002 அன்று தவறி விட்டது கண்டெடுத்தவர்கள் சூர்யா மருந்தகம், பஸ் நிலையம் முன்பாக, அச்சுவேலி என்னும் முகவரியில் தயவு செய்து ஒப்படைக்கவும். (4800)

## கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பாடசாலைகளின்கிரிக்கெட்சங்கம் நடாத்தும் 15,17 வயதுகளுக்கு உட்பட்ட கிரிக்கெட் போட்டியில் நாளை,

15 வயதின் கீழ் 'எ பிரிவில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிஅணி எதிர்விக்டோறியாக் கல்லூரி அணி ஸ்கந்தவரோதயாக்கல்லூரி மைதானத்திலும்.

15 வயதின் கீழ்' பி, பிரிவில் யாழ்.மத்திப கல்லூரி அணி எதிர் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி யாழ்.மத்திய கல்லூரி மைதானத்திலும் மோதவுள்ளன. (உ-3)

## புரிந்துணர்வு

பிரதமரதும், அமைச்சரவையினதும் சார்பில் சட்டமா அதிபர் எஸ். கமலசபேசன் ஆஜராகி இருந்தார். விடுதலைப்புலிகளின் தலைவர்வே. பிரபாகரனது சார்பில் சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகவில்லை இதனையடுத்து வழக்கு இம்மாதம் 18ம்திகதிக்கு நீதவானால் ஒத்திவைக்கப்பட்டது. (வ)

# சலுகைகளை தமக்கும் தரக்கோரி

# கஜுத். கைதிகள் உண்ணாவிரதம்

(கொழும்பு)

நீர்கொழும்பு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் முன்னாள் பாதுகாப்பமைச்சர் ரத்வத்தையைப்போன்று தமக்கும் சலுகைகளை வழங்கக்கோரி நேற்றுமுதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பொதுத் தேர்தல் காலத்தில் இடம்பெற்ற வன்முறைகள்மற்றும்கொலைச்சம்பவங்கள் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டவர்களே இவ்வாறு உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தேர்தல்தினத்தன்று இடம்பெற்ற மடவளைப் படுகொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட அனுருத்த ரத்வத்தையை கைதிஎன்ற நிலையில் இருந்து வேறுபடுத்தி பல் வேறுசலுகைகள்உரிமைகளை வழங்குகின்றபோது,

தமக்கும்இவ்வாறான சலுகைகளை ஏன் வழங்கக் கூடாது என்று கோரிக்கையை இவர்கள் முன்வைத்துள்ளனர். (உ.7)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு றோ.க த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி எதிர்வரும் 11ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி ற.ரவீந்திரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மேலதிக மாகாண கல்வித் திணைக்கள பெறியியலாளர் கு.சிவபாலன் பிரதமவிருந்தினராகவும் கோப்பாய் கோட்ட கல்விப் பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரம் மேலதிக மாகாண கல்வித்திணைக்கள நிர்வாக உத்தியோகஸ்தர் பூ. புலேந்திரராஜா, சேவைக்கால ஆலோசகர் நா. சுவாமிநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் யாழ். சுப்பசூஸ் நிறுவன உரிமையாளர் ஆர். ஜெயராசா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (இ)

## சமாசக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி கிழக்கு பிரதேசசபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாச வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று காலை 10மணிக்கு நீர்வேலி ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது

இந்நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். கிருஸ்ணசாமி விருந்தினராக கலந்துகொள்வர்

சகல சனசமூக நிலையப் பிரதிநிதிகளையும்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பிரதேச சபைச் செயலர் எஸ் குகதாசன் கேட்டுள்ளார்(இ)

## சிங்கள இன

இதுதான் எமதுநிலைப்பாடு இந்தக் கொள்கையுடைய 50ஆயிரம் மாணவர்கள்ஒன்றிணைந்திருக்கிறோம் என்ற பதில் வந்தது.

மாணவர்களை மடக்க நினைத்த சமூகசேவகர்தனது கைத் தொலைபேசியை எடுத்து தனக்குத் தெரிந்த இராணுவ அதிகாரியுடன் தொடர்பு கொண்டு.

இங்கே பல்கலைக்கழக வாசலில் நிற்கின்றேன் உடன் படிக்கைக்கு எதிராக இராணுவம் ஆயுதப்போராட்டத்தை முன்னெடுத்தால் 50ஆயிரம் இளைஞர்களைத் தந்துதவலாம் என்று பல்கலைக்கழக மாணவர் தலைவர் சொல்கிறார் அவருடன்பேசுகிறீர்களா?

அவ்வாறு கூறிய படியே மாணவர்பக்கம் திரும்பினார் சற்றுமுன்னர் கூடியிருந்து கோசம் போட்ட எவருமே அங்கிருக்கவில்லை.

எப்படியிருக்கிறது தென்பகுதியில் சமாதானத்தைக் குழப்பியடிக்கும் கூத்து. (உ)

## வரவு செலவுத்திட்டம் 22 ல் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

வரவு செலவுத்திட்டம் தொடர்பான ஒதுக்கீட்டுச் சட்டம் மூல இரண்டாம் வாசிப்பு இந்தமாதம் 23 25, 26, 27, 30 ஆம் திகதிகளில் தொடர்ந்து இடம் பெறவுள்ளது.

ஏப்ரல் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும் வரவுசெலவுத் திட்டக் குழுநிலை விவாதங்கள் தொடர்ந்து 10 ந்திகதி வரை இடம் பெறும். (உ)

## நிவாரணத்தை உடன் பெறலாம்

(கொழும்புத்துறை)

யாழ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகளூடாக நிவாரணம் பெறுவோர் பெப்ரவரி மாதத்திற்குரிய நிவாரணப் பொருட்களை உடனடியாகப் பெற்றுக்கொள்ளுமாறு சங்க வட்டாரங்கள் அறிவுறுத்தியுள்ளன.

மார்ச் மாதத்திற்குரிய நிவாரணப் பொருள் விநியோகம் உடனடியாக ஆரம்பமாகவுள்ளதை யடுத்தே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (உ-223)

## பலாலி

சரத் கருணரத்னா தகவல் தருகையில்,

கட்டுவன் பகுதியில் ஏற்பட்ட திடீர் தீவிபத்தினால் காலாவதியான வெடி மருந்துவகைகளும், மற்றும் பாவனைக்குதவாத கவசவாகனங்கள் ஆட்லறி ஷெல்கள் மற்றும் வெடிக்கவைக்கும் கருவிகள் ஆகியனவும் முற்றாக எரிந்துபோயின.

திடீரென ஏற்பட்ட இத் தீவிபத்து தொடர்பாக உடனடியாக எந்தவிதமான தகவல்களும் கிடைக்கவில்லை ஆயினும், இத்தீவிபத்து தற்செயலாக ஏற்பட்டதாக இருக்கலாமென்று இராணுவத்தரப்பில் கருதப்படுகிறது என்றும் கூறினார்.

இதேவேளை இத்திடீர் தீவிபத்து தொடர்பாக இராணுவ விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டிருப்பதாகவும், முப்படைத் தளபதிகளும் தீவிபத்துக்குரிய காரணங்களை கண்டறிவதில் தீவிரமாகச் செயற்பட்டுள்ளதாகவும் இராணுவத்தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன தீவிபத்துக்குள்ளான ஆயுதக் களஞ்சியம் ஒதுக்குப்புறத்தில் அமைந்திருந்ததால் இராணுவத்தினருக்கு எந்தவிதமான காயங்களோ, உயிரிழப்புகளோ ஏற்படவில்லை என்றும் இராணுவத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (வ)

## புளொட்டின்ஆயுத

தேசிய கூட்டமைப்பினரோடு இணைவது என்பது அவ்வமைப்பு தோற்றுவிக்கப்பட்ட காலம் தொடக்கம் நாம் விடுக்கும் கோரிக்கை எனவே இவை இரண்டையும் ஒன்றிணைத்துப் பாக்க முடியாது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைவதற்கு நாம் எப்போதும் தயாராகவே உள்ளோம்.

அதற்காக கூட்டமைப்பினருக்கு விண்ணப்பம் அனுப்பி அதில் இணைவதற்குத் தயாராக இல்லை. கூட்டமைப்போடு இணைவதற்காக பல தடவைகள் பத்திரிகைகள் மூலம் பகிரங்கப்படுத்தியும் கூட்டமைப்பினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென்றும் சித்தார்த்தன் மேலும் தெரிவித்தார். (ந-4)

## பொலிஸ் பதிவு தேவையில்லை

பிற மாவட்டங்களில் இருந்து கொழும்பு செல்லும் பயணிகள் அவர்கள் தங்கும் இடங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களில்இனிமேல் பதியத்தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவல் பொலிஸ்மாஅதிபரினால் சகல் பொலிஸ்நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## பொலிஸ்அதிகாரி கைது

(கொழும்பு)

சட்டண பத்திரிகை ஆசிரியர் றோகணகுமாரவின் கொலைச்சம்பவம் தொடர்பாக ஜனபதிபதி பாதுகாப்புப் பிரிவின் துணைப்படை பொலிஸ் உயர் அதிகாரியொருவரை நேற்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை செய்துள்ளனர்.

பத்திரிகைஆசிரியர்கொலை தொடர்பாக கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இவர்ஜனாதிபதி செயலகத்திலிருந்து அழைக்கப்பட்டுவிசாரணை மேற்கொண்டுள்ளதாக குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரி யொருவர் தெரிவித்துள்ளார்.

இதுவரைவிசாரணைசெய்ததில் இக்கொலை தொடர்பாகப் பல புதியதகவல்கள் கிடைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

1999ம் ஆண்டு செப்ரெம்பர்மாதம் 7ம்திகதி சட்டண பத்திரிகையாசிரியர் றோகணகுமார கொலைசெய்யப்பட்டமை இங்குகுறிப்பிடத்தக்கது. (ந-4)

## பிரதேச செயலக மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வலி கிழக்கு பிரதேச செயலக பதிவு செயயப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் இன்று நடைபெறும் வருடாந்த தடகள போட்டியை முன்னிட்டு இன்று காலை 6.30மணிக்கு மரதன் மற்றும் சைக்கிள் ஓட்டப்போட்டிகள் நடைபெறவுள்ளன. இப் போட்டியாளர்கள் கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு முன்பாக கூடுமாறு கேட்கப்பட்டுள்ளனர் (இ)


## விஷேச வழிபாடு

12-03-2002 சிவராத்திரியை முன்னிட்டு நல்லூர் தேரடி அறுபத்துமூன்று நாயனார் குருபூசை மடத்தில் 13-03 2002 காலை விஷேசபூசை வழிபாடும் 7.30 மணிக்கு அன்னதானமும் நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம்.

ந. நவரட்ணம்
அறுபத்துமூன்று நாயனார்
குருபூசை மடம்

(கி-3685)

## உலக மகளிர்தின

கருத்தரங்கும் நன்றிவழிபாடும்

இடம்: றிம்மர் மண்டபம் மெதடிஸ்த திருச்சபை யாழ்ப்பாணம்.

காலம்: இன்று (09 03 . 2002)
மு.ப 9-00 மணிமுதல் பி.ப 3-30 வரை கருத்தரங்கு.
பி ப 4 00 மணி முதல் பி.ப 5.00வரை நன்றி வழிபாடு.

அருளுரை: வண. சுமித்திரா பர்ணாந்து
(ஒருங்கிணைப்பாளர் மகளிர் அவைதேசிய கிறிஸ்தவ சங்கம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ். கிறிஸ்தவ ஒன்றியம்
(4798)

## மாபெரும் சிரமதானப்பணி 3

இடம்: சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி
காலம்: நாளை (10 - 03 - 2002) ஞாயிறு காலை 8 00மணி

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் முன்னின்று நடாத்தும் மாபெரும் சிரமதான பணியில் வர்த்தக அங்கத்தவர்கள் ஆர்வலர்கள், கல்லூரி பழையமாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் மற்றும் தென்மராட்சி அபிவிருத்தியில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர்மன்றம்
சாவகச்சேரி

அனுசரணை வழங்குபவர்

# சண்றைஸ் நிறுவனம்

சாவகச்சேரி

(கி- 3681)

# கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழா

# கடல் கடந்த ஒரு யாத்திரை பெருவிழா

**அருட்திரு றூபன் மரியாம்பிள்ளை**

கச்சதீவு என்ற பெயரை கேட்டவுடன் அவ்விடத்திற்கு என்றுமே போகாதவர்கள் கூட அந்தப்பெயரை அடிக்கடி கேட்ட ஒரு நெருக்கமான உணர்வை பெற்றுக்கொள்ளுவர்.

இந்திய அரசியல்வாதிகள் குறிப்பாக தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் பேசுவதற்கு ஒன்றுமில்லையென்றால் உடனடியாக கச்சதீவுப் பிரச்சினையை அது இலங்கைக்கு சொந்தமானதா? இந்தியாவிற்கு சொந்தமானதா?என்ற சர்ச்சையை கிளறிவிடுவது கடந்த சிலகால வழமையாகி விட்டது.

இடஅமைப்பு

'கச்' என்பது கடற்கரையையும் 'தீவு' என்பது நீர் சூழ் நிலத்தையும் குறித்து நிற்கின்றது. எனவே, கச்சதீவு என்பது கடற்கரைத் தீவு (**Sea cost of Islands**) என்று வரையறை செய்யப்படுகின்றது.

நெடுந்தீவிற்கு மேற்கே 11 மைல்களுக்கு அப்பாலும் இந்தியாவிற்கு நெருக்கமாக பாம்பன் இராமேஸ்வரத்திலிருந்து வடகிழக்கே 10 மைல்களுக்கு அப்பால் இலங்கையையும் இந்தியாவையையும் ஊடறுத்துச்செல்லும் ஒங்கிய பாக்கு நீரிணையின் மையப்பகுதியில் இத்தீவு அமைந்துள்ளது. இத்தீவின் நீளம் 1 மைல் ஆகவும் அகலம் சராசரியாக 300 யார் ஆகவும் இருக்கின்றது.

இந்தத் தீவு தற்போது நாட்டு நிலைமைகள் காரணமாக தன் பிரபல்யத்தை இழந்துவிட்டாலும்சிலகாலத்துக்கு முன்னர் மிக கோலாகலமாகதிருவிழா கொண்டாடப்பட்டும் பலரால் பரபரப்பாக பேசப்பட்டும் வந்தவொரு இடமாகும்.

மனித சஞ்சாரமற்ற இத்தீவின் ஒரேகட்டடம் ஆலயமாகும்

வறண்ட வலயத்துக்குரிய முட்புதர்களும்சிறிய புற்தரைகளும்கடலோரத்தாவரங்களும் படர்ந்துள்ள மனித சஞ்சாரமற்ற இச் சிறிய அழகிய தீவில் எந்தக் கட்டடங்களுமே இல்லை. அங்கு அமைந்துள்ள புனித அந்தோனியார் ஆலயமே ஒரேயொரு கட்டடம் ஆகும். இது இந்திய மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்கும் ஒரு தங்குமடமாகவே இருந்து வருகின்றது. திருநாள் காலங்களில் இந்தியர்களும் இலங்கையர்களும் வந்துபோகின்ற யாத்திரைத் தலமாக இருந்தபடியால் கள்ளக் கடத்தல், இந்தியப் பொருட்களின் பண்டமாற்று, இந்தியர்களின் இரகசிய ஊடுருவல் என பல தொடர்புகளும் அதனால் சிக்கல்களும் நிறைந்த ஒரு இடமாகவே இது இருந்திருக்கின்றது. இங்கிருந்து யாத்திரைக்குச் செல்வோர் சன்லைட், லக்ஸ்சோப்புக்களையும், பி. சி. சி. தேங்காய் எண்ணெய் போன்ற மற்றும் பல பொருட்களையும் அங்கு கொண்டுசென்று இந்தியாவிலிருந்து வரும் யாத்திரிகர்களோடு சோலாபூர் பெட்சீட், சறம், துவாய் பேன்ற பொருட்களுக்குபண்டமாற்று செய்வர்.

மலையக இந்தியத் தமிழர்கள் இத் திருவிழாவிற்குஇந்தியாவிலிருந்து வரும் தம் சொந்த பந்தங்களை சந்திக்கவும் திருவிழாக் காலங்களில் இங்கு வருவதுண்டு. அவர்களுக்கிடையில் அந்தநேரங்களில் திருமண வைபவங்கள் நடந்ததாகக்கூடகூறப்படுகின்றது.

ஆலய வரலாறும் ஆதிக்கமும்

1913 ஆம் ஆண்டில் இச் சிறிய அந்தோனியார் யாத்திரைத் திருத்தலம் ஆரம்பிக்கப்பட்டதாக சான்றுகள் தெரிவிக்கின்றன. மீனவர்கள் கடலில் அடிக்கடி தாம் சந்திக்கும் ஆபத்துக்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ளவும் தொழில் முயற்சிகள் நல்ல முறையில் கைகூடவுமே இவ்வாலயம் கட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது. நாப்புதாணை என்ற சிற்றூரைச் சேர்ந்த தமிழர் தாம்சென்ற படகு புயலில் சிக்கியபோது புனித அந்தோனியாரை வேண்டிக் கொண்டு அபாயத்திலிருந்து தப்பியதால் இக் கோவிலைக்கட்டினார் என கூறப்படுகின்றது.

இவ்வாலயம் அமைக்கப்பட்ட பின்னர் கச்சதீவுக்கு செல்லும்போது கடற்கரையில் ஒரு புனித அந்தோனியார்நடந்துகொண்டுசெல்வாரென்றும் பாயின் துணையுடன் செல்லும் கட்டுமரங்கள் கரையடைந்தவுடன் அவ்வுருவம் மறைந்துவிடும் எனவும் வாய்வழி பாரம்பரியம் கூறுகின்றது.

ஆரம்பம்முதல் யாழ்.மறைமாவட்ட ஆயரின் ஆளுகைக் குட்பட்டபிரதேசமாகஇருந்து வந்துள்ள கச்சதீவு புனித அந்தோனியார் யாத்திரைத் தலம் நெடுந்தீவு பங்குத்தந்தையின் கண்காணிப்பிலேயே இருந்து வந்துள்ளது. இவ்வாலயம் 31 வருடங்களாக ஞானப்பிரகாசம்அந்தோனிப்பிள்ளை என்பவரால் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. இவரின் தந்தையாகிய சவரிமுத்து ஞானப்பிரகாசம் இவருக்கு முன் இவ்வாலய மூப்பராக கடமையாற்றியுள்ளார்.

1907 ஆம் ஆண்டு நெடுந்தீவு கிழக்கை சேர்ந்த யோசப் சின்னத்துரை என்ற ஆசிரியரும் அவரது தந்தையாரும் நெடுந்தீவுவாழ்நல்லெண்ணம் கொண்ட சிலருடன்ஒரு வள்ளத்தில் தளபாடங்களுடன் அங்கு சென்று இவ்வாலயத்தை அமைக்க அடித்தளம் இட்டதாக அறியவருகிறது. நெடுந்தீவைச் சேர்ந்த இவர்களுடைய இந்தமுயற்சியைத் தொடர்ந்து அவர்களுடைய விருப்பத்தோடும் ஒத்துழைப்போடும் நெடுந்தீவு மக்கள் இச்சிறிய ஆலயத்தை ஆண்டாண்டு தரிசிக்கத் தொடங்கினார்கள்.

கச்சதீவு பற்றிய சர்ச்சை

கச்சதீவு பற்றிய சர்ச்சை 1960 களில் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் திருவிழாக் கொண்டாட்டங்கள பெரிதாக சோபிக்கவில்லை என்றே அறியவருகிறது. கச்சதீவு இலங்கைக்கு சேர்ந்ததா? இந்தியாவிற்கு சேர்ந்ததா? என்ற அரசியல் சர்ச்சையின் விளைவாக இருபகுதியினரும் இணைந்து நடத்திய கடல் கடந்த இந்த யாத்திரைத் தல திருவிழா தன் களையிழந்தது எனலாம். அப்போதைய யாழ். மறைமாவட்ட ஆயரான மேதகு எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகையின் முயற்சியால் பாதுகாப்பு அமைச்சும் வெளிவிவகார அமைச்சும் இணைந்து யாழ். அரச அதிபர் திரு வேணன் அபேசேகர, இராணுவ அதிகாரி கேணல் மொறிஸ் ஜெயவீர ஆகியோருடன் இப் பிரச்சினைக்கான தீர்வினைக் காணவும், இத்திருவிழாவை மீள ஆரம்பிக்கவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் எழுதப்பட்ட வரலாற்று ஆவணங்களான கையெழுத்து ஓலை ஏடுகள் வழியாக கச்சதீவு, நெடுந்தீவு மேற்கைச் சார்ந்த மணியகாரர் ஒருவரின் கண்காணிப்பிலிருந்து, பின்னர் அதே இடத்தைச் சார்ந்த வேலாயுத உடையார் மூலமாக அவரது மகள் குஞ்சியடி என்பவருக்கு கச்சதீவின் செழிப்பான அரைவாசியை சீதனமாகக் கொடுத்துள்ளார். வட புலத்தீவுகளின் வரலாறு என்ற தலைப்பில் ஆர். சி. எஸ். நவரட்ணம் எழுதிய ஆங்கில நூலில் கச்சதீவு பற்றிய சில சான்றாதாரங்கள் இருப்பதாக கூறப்படுகிறது. இவற்றினடிப்படையில் கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது என்ற ஒரு எண்ணப்பாடு நிறுவப்பட்டது. இவை எல்லாவற்றினடிப்படையில் சிறீமா-சாஸ்திரி ஒப்பந்தம் அமுல்படுத்தப்பட்டு கச்சதீவு இலங்கைக்கே சொந்தமானது என நிரூபிக்கப்பட்டது. இருப்பினும் முன்னர் போல் திருவிழாக்களை கொண்டாடக் கூடிய நிலையினை நாட்டில் நடந்த வன்செயல் நிகழ்வுகள் தடுத்துவிட்டன.

> கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா மார்ச் மாதம் 10ஆம் திகதி கொண்டாடப்படுவதையிட்டு இச் சிறப்புக் கட்டுரை பிரசுரமாகிறது
> (ஆர்)

நெடுந்தீவிலிருந்து மாதாவின் யாத்திரை

நெடுந்தீவு பங்கு ஆலயத்திலிருந்தே கச்சதீவு திருவிழாவிற்கான ஆலயமணி, கொடிமரம், கொடி, சுற்றுப்பிரகாரக் கூடு என்பன கொண்டு செல்லப்படும். இவ்வாறு சுற்றுப் பிரகாரக் கூடினை நெடுந்தீவிலிருந்து கொண்டுசெல்லும் போது வெறும் கூடாகக் கொண்டு செல்லக்கூடாது என்று மாதா சொரூபத்தினை கூட்டினுள்ளே வைத்து கொண்டுபோய் திருநாள் முடிந்து வரும்போது திரும்பவும்மாதாசொரூபத்தினைகூட்டினுள் வைத்தே கொண்டு வருவது வழக்கமாகவுள்ளது. இவ்வகையில் நெடுந்தீவு மக்களுக்கு மாதா சொரூபத்தோடு கச்சதீவிற்கு சென்று வரும் ஒரு யாத்திரை இதுவாகும். திருநாள் முடிந்து வரும் போது அங்கிருந்து ஒரு பொருளையும் கொண்டுவரக் கூடாது, அவ்வாறு வந்தால் பிரயாணம் தடைப்படும் என்ற ஒரு ஐதீகம் உண்டு. இதனால் அங்கிருந்து விறகு கூட கொண்டு திரும்பமாட்டார்கள் என்று கூறப்படுகிறது.

எழில்மிக்க தீவைசுற்றிஅந்தோனியார் சொரூபங்கள்

இத்தீவின் கிழக்கு கரைப் பகுதி முருகைக்கற்களாலான பெரும் பாறைகளைக் கொண்ட இயற்கை வளம் கொண்ட ஒரு பகுதியாகும். இத்தீவின் மேற்குப் பகுதியிலுள்ள கடற்கரை மணலின்றி மணிமணியான கடற்கற்களால் நிறைந்து காணப்படுகின்றது. தெற்கு, தென் கிழக்குப் பகுதி கடற்கரைகள் 'பார்க்' கற்கள் நிறைந்த பிரதேசமாகும். ஆங்கிலேயர்களால் கட்டப்பட்டகோபுரம் இன்றும் சிதைந்த நிலையிலுள்ளது. இது அமைந்திருந்த மணல்மேட்டில் இன்று நின்று பார்த்தாலும் கச்சதீவின் முழுத்தோற்றத்தையும் அழகாகக் காணலாம். சூரிய உதயத்தையும் அஸ்தமனத்தையும் இவ்விடத்தில் நின்று பார்ப்பவர்கள் சொக்கிப் போய்விடுவார்கள்.

கச்சதீவு எனப்படும் இச் சிறிய தீவைச் சுற்றி உயரமான அந்தோனியார் சொரூபங்கள் நிறுவப்பட்டிருப்பது இத்தீவின் சிறப்பம்சமாகும். இலங்கை-இந்திய மீனவர்கள் எந்தப் பாதுகாப்புமற்ற நிலையில் இருநாட்டு கடற்படைத்தள அச்சுறுத்தல்கள் மத்தியில் ஓயாது அடித்துக் கொண்டும், ஆர்ப்பரித்துக் கொண்டும் இருக்கின்ற அந்த ஆழ்ந்த கடலில் மீன்பிடிப்பதற்குப் போய் அங்கு தங்கியிருக்கும் போது அந்தோனியாரின் பாதுகாவல் தேவை என்பதனால் அந்தோனியார் சொரூபங்களை ஊரைச் சுற்றி அமைத்திருக்கலாம். ஒவ்வொரு குழுவும் தாம் மீன் பிடிக்கின்ற கடற்கரையோரமாக அந்தோனியார் சொரூபங்களை நிறுவி தமது இடங்களை குறித்தும் வைத்திருக்கலாம்.

போர்க்கப்பல்கள் போல மீன்பிடிப் படகுகளின் அழகிய ஊர்வலம்

இன்று, திங்கள், புதன், சனிக்கிழமைகளில் நூற்றுக்கணக்கான இந்தியாவின் இழுவைப் படகுகள் கிழக்குப் பக்கமாகவும் மேற்குப் பக்கமாகவும் நெடுந்தீவுக் கடற்பரப்பில் மீன்பிடிக்க செல்கின்றன. இக்காட்சிதூரத்தேயிருந்து பார்க்கும் போது போருக்குப் புறப்பட்டுவிட்ட யுத்தக் கப்பல்கள் மெதுவாக நகர்ந்து செல்வது போல இருக்கும்.

இரண்டு இடங்களில் புனித செபஸ்தியார் சொரூபமும், மத்திய பகுதியில் புனித சூசையப்பர் சொரூபமும் நிறுவப்பட்டிருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது. புனித சூசையப்பர் அமைந்துள்ள பகுதியைச் சுற்றி 100 வருடங்களுக்கு மேற்பட்ட 7 புளிய மரங்கள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. இருப்பினும் தற்போது அங்கு 3 புளிய மரங்களை இன்று காணக்கூடியதாக உள்ளது.

இங்கிருக்கும் அந்தோனியார் சொரூபத்துக்கும் நாம் வழமையாக வைத்துக்கொண்டாடி வரும் அந்தோனியார் சொரூபத்துக்குமிடையில் சொரூப அமைப்பில் ஒருசிறிய வேறுபாட்டை காணக்கூடியதாக உள்ளது. கச்சதீவில் உள்ள புனித அந்தோனியார் சொரூபமானது திருச்சிலுவையை கையில் ஏந்தி உயர்த்தி மக்களுக்குக் காட்டியவாறு அமைக்கப்பட்டுள்ளது.

ஆழ்கடலின் மத்தியில்தினாக்கு பனை மரங்கள்

ஆழ்கடலின் மத்தியில் பச்சைப் பசேலென இயற்கை அழகு கொண்டு விளங்கும் இத்தீவானது காண்போர் கண்களை கவர்ந்திழுக்கவும், வருவோர் மனதுகளை கொள்ளை கொள்ளவும் கூடிய ஓர் இன்பவனமாகும்.

தினாக்கு, காட்டுப்பூவரசு, நாகதாளி போன்ற பலவகையான மரங்களும் செடி கொடிகளும் இத்தீவில் நிறைந்துள்ளன. மருந்து மூலிகைகள் கூட இங்கிருந்து பெறப்படுவதாகக் கூறப்படுகின்றது. 1972 ஆம் ஆண்டில் பனை விதைகள் நாட்டப்பட்டதாகக் கூறப்படும் 100ற்கு மேற்பட்ட பனை மரங்கள் இங்கு நிற்கின்றன.

பச்சை ஓணான்களும், பச்சைப் பாம்புகளும் இங்கு அதிகமாக காணப்படுவதாக கூறப்படுகின்றது. இருப்பினும் திருநாட் காலங்களில் காடுகளை வெட்டி துப்புரவு செய்யும் போது எந்த விஷ பாம்புகளையும் காணவில்லை என்றே தெரிவிக்கின்றனர். பூனை, எலி, காகம், குயில் என்ற மிருகங்களும், பறவைகளும் வாழுகின்ற இச் சிறு தீவிலே மீன்பிடிப்பதற்காக தங்கியிருக்கும் இலங்கை இந்திய மீனவர்களைத் தவிர மனிதர்கள் யாரும் வாழ்ந்ததாக அறியவரவில்லை. குடிப்பதற்கு ஒரு துளிநீர் கூட கிடைக்காத இத்தீவில் ஒரேயொரு உவர்க்கிணறு மட்டும் உள்ளது. பறவைகளும், மிருகங்களும் கடல் நீரையே பருகுவதாக கூறப்படுகின்றது. இங்குகாணப்படும் மரங்கள் கூட அங்கு செல்லும் யாத்திரிகர்களினால் தாம் தங்குவதற்கு வசதியாக வளைந்து குகைகள் போல காட்சி தருகின்றன.

1982 ஆம் ஆண்டின் பின்னர் திருநாட்கள் இல்லை

1982 இன் பின்னர் நாட்டு நிலைமைகள் மோசமடைய கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்துக்குசெல்வதில் ஏற்பட்ட பாதுகாப்பு பிரச்சினைகளாலும் குழப்பங்களாலும் இத்திருநாள் கொண்டாடப்படவேயில்லை என அறிய வருகிறது. 1988 ஆம் ஆண்டு இந்திய அமைதி காக்கும் படை இலங்கையில்இருந்தவேளை நெடுந்தீவுப் பங்குத்தந்தையாக இருந்த எம்.எம். வி. அமிர்தகுமார் அடிகளின் முயற்சியால்60பேர் கொண்ட குழு ஒன்று திருநாள் தினத்தன்று ஒருநாள்யாத்திரையை மேற்கொண்டு அங்கு திருநாளை நடத்தியது. 2000ஆம் ஆண்டு யூபிலி ஆண்டானமையால் இவ்விழாவினைக் கொண்டாட நெடுந்தீவுப் பங்குத்தந்தை மொன் பேட் அடிகளார் முயற்சி எடுத்தாராயினும் ஆனையிறவில் போர் திடீரென மூண்டமையினால் இவ்விழாவினை நடத்த யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை விரும்பவில்லை.

2001ஆம்ஆண்டு 12ஆண்டுகளின்பின்னர் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் திருநாள் திருப்பலி நடத்தப்பட்டது. நெடுந்தீவைச் சேர்ந்த 100 பேர் இரு வள்ளங்களில் கச்சதீவு மூப்பர் புலவர் ஏ. டபிள்யூ. அரியநாயகம் அவர்களின் ஒத்துழைப்போடு 25. 03. 2001 கச்சதீவுக்குச் சென்றுவிழாக்கொண்டாடினர்

2002 ஆம் ஆண்டு மார்ச் 10 திருவிழா

நாட்டு நிலைமைகள் சாதகமாகஇருப்பதால் இவ்வாண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதி திரு விழாவை சிறப்பான விதமாக கொண்டாட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம்ஆண்டகை விருப்பம் தெரிவித்துள்ளார். இதன் முதற்கட்டமாக மாசி மாதம் 8 ஆம் திகதி யாழ். ஆயர், அரச அதிபர், ஊர்காவற்றுறைஅந்தோனியார் கல்லூரி அதிபர் அருள்திரு யேசுதாசன் ஆகியோருடன் கச்சதீவு புனிதஅந்தோனியார் ஆலயத்துக்கு சென்று திரும்பியுள்ளார். கச்சதீவு திருவிழாவிற்கு இவ்வாண்டு மக்கள் செல்வதற்கு அனுமதி வழங்கும்படி வடபகுதி கடற்படை அதிகாரி அட்மிரல் சரத் பி. வீரசேகராவிடம் கோரிக்கைவிடுத்துள்ளார். குறிகட்டுவான்மற்றும்நெடுந்தீவுத் துறைகளிலிருந்து கச்சதீவுக்கு படகு சேவையை நடத்த அனுமதி கோரியுள்ளார். ■

---

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இன்றைய அரசியல் சூழ்நிலை பற்றிய கலந்துரையாடல் நாளை மு.ப. 10.00 மணிக்கு ஸ்ரான்லி வீதியிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ். மாவட்ட தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

(உ-3)

# ஆப்கானில் உக்கிரமடையும் போர்

# மேலதிக படையினர் அங்கு விரைவு

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியில் அல்கெய்டா போராளிகளுக்கும் அமெரிக்க படையினருக்குமிடையே கடும் மோதல்கள் மூண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மோதல்கள் உக்கிரமடைந்ததை அடுத்து அங்கு அவசர அவசரமாக மேலதிக படையினரும் நவீன குண்டுவீச்சு விமானங்களும் அனுப்பப்பட்டு வருகின்றன.

கார்கெஸ் பகுதிக்கு தெற்கேயுள்ள பனிபடர்ந்த மலைகளில் மூவாயிரம் மீற்றர்கள் உயரத்திலுள்ள குகைகளில் இந்த மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

அல்கெய்டா மற்றும் தலிபான் போராளிகள் தமது இழப்புகளை கருத்தில் கொள்ளாது அமெரிக்க துருப்பினருடன் கடுமையாக மோதி வருவதாகவும்,

அமெரிக்க விமானக் குண்டு வீச்சுக்களையும் பொருட்படுத்தாது குகைகளில் பதுங்கு குழிகளில் இருந்து வெளியே வந்து போரிடுவதாகவும் பின்னர் மீண்டும் குகைகளுக்குள் சென்று விடுவதாகவும்,

இதனால் அமெரிக்க துருப்பினர் அவர்களுக்குக் கிட்ட நெருங்க முடியாது திணறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த புதன் கிழமை மட்டும் இடம்பெற்ற தாக்குதலில் 100 அல்கெய்டா போராளிகள் கொல்லப்பட்டுள்ளதாக ஆப்கானிஸ்தானிலுள்ள அமெரிக்க இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார். (உ-5)

## பொது நலவாய நாடுகள் சமாதானத்திற்கு வரவேற்பு

(சிட்னி)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அனைத்துகை பொதுநலவாய நாடுகளின் தலைவர்களும் வரவேற்றுள்ளனர்.

அவுஸ்திரேலியா மெல்போன் நகரில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொண்ட சுமார் 61 நாடுகளின் தலைவர்கள் இவ் ஒப்பந்தத்தை வரவேற்றுள்ளனர்.

இது குறித்து அவுஸ்திரேலியப்பிரதமர் கருத்து தெரிவிக்கும் போது இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் நல்லதிருப்பம் ஏற்பட்டுள்ளது. இந்த அமைதி முயற்சியை எந்தவகையிலும் இடையூறு செய்யாமல் நாட்டின் தலைவர் என்றரீதியில் ஒத்துழைப்பு வழங்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை பயங்கரவாத அமைப்புகள், மற்றும் சக்திகளுக்கு இடமளிப்பதில்லையென இம்மாநாட்டில் கலந்து கொண்ட தலைவர்கள் முடிவெடுத்துள்ளனர். (ந-4)

### அயோத்தியில் இராமர் ஆலயம்

## நீதிமன்றத் தீர்ப்பை ஏற்பதாக விஸ்வ ஹிந்து பரிசத் அறிவிப்பு

(ஹைதராபாத்)

இந்தியாவின் அயோத்தி நகரில் இராமர் ஆலயம் அமைப்பது குறித்து நீதிமன்றத்தின் தீர்ப்பைத் தாம் ஏற்றுக் கொள்வோமென தீவிர இந்துத்துவ அமைப்பான விஷ்வ ஹிந்து பரிசத் அமைப்பு தெரிவித்துள்ளது.

அயோத்தி நகரில் இராமர் கோவிலைக் கட்டியேதீருவோமென சூளுரைத்துவந்தவிஷ்வ ஹிந்து அமைப்பின்இந்ததிடீர் மாற்றத்தை முஸ்லிம்களின் 'அனைத்து இந்திய முஸ்லிம் சிவில் சட்டவாரியம்' எச்சரிக்கையோடு வரவேற்றுள்ளது.

இந்த உறுதியை விஷ்வ ஹிந்து எழுத்து வடிவிலும் தரவேண்டுமென இந்தஅமைப்பு கோரியுள்ளது.

இதேவேளை, இந்த மாதம் 15ஆம்திகதிமேற்படி கோவில் கட்டும் பணியை ஆரம்பிக்கவும் மதவழிபாடுகளில் ஈடுபடவும் தீர்மானித்துள்ளதை விஷ்வஹிந்து பரிசத் கைவிடவேண்டுமெனவும் அந்த அமைப்பு வற்புறுத்தியுள்ளது.

இந்தப் பிரச்சினைக்குத் சுமுகமான தீர்வு ஒன்றைக் காணும் பொருட்டு இந்து, முஸ்லிம் மதத் தலைவர்கள் ஒன்று கூடி இன்று ஆராயவுள்ளனர்.

இந்தக்கூட்டத்திற்குமுன்னதாக விஷ்வஹிந்து நீதிமன்ற தீர்ப்பைஏற்றுக் கொள்வதாக அறிவித்துள்ளமை நிலமையை ஓரளவு கட்டுக்குள் கொண்டு வர முடியுமென நம்பப்படுகிறது. (உ-5)

## பந்தயம் கட்டியோருக்கு ஏற்பட்ட பரிதாபம்

(புதுடில்லி)

குஜராத் மாநிலத்தின் வன்முறைகள் ஏனைய மாநிலங்களுக்கும் பரவும் என்று பந்தயம்பிடித்த 70 பேரை இந்திய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறானவர்களாலேயே வன்முறைகள் வெடித்துள்ளது எனவும் பணப்பந்தயத்தின் மூலம் வன்முறையை தூண்டியுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த இந்த 70 பேரும் கையடக்கத் தொலை பேசி மூலம் உரையாடி அடுத்த கலவரத்தை எங்கு தூண்டலாம் என்று திட்டம் தீட்டிய வேளை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தொடர்ந்து விசாரணைக் குட்படுத்தப்பட்டு வருகின்றனர். (உ-7)

### ஆயுதக் கண்காணிப்பாளரை

## ஈராக்கிற்குள் அனுமதிப்பது பற்றிய பேச்சுவார்த்தையில் முன்னேற்றம்

(பக்தாத்)

ஈராக்கில் ஆயுதகண்காணிப்பாளர்களை அனுமதிப்பது தொடர்பாக அந்நாட்டிற்கும் ஐக்கிய நாட்டு சபைக்கும் இடையே நடைபெற்றுவந்தபேச்சு வார்த்தை வெற்றியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கிற்குள் சர்வதேச ஆயுதக் கண்காணிப்பாளர்களை அனுமதிப்பதற்கு அந்நாடு தவறும்பட்சத்தில் ஈராக்கிற்கு எதிராக இராணுவ நடவடிக்கையை ஆரம்பிப்பது தொடர்பாக அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் ஆராய்ந்து வருவதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில் ஐ.நா. சபைக்கும் ஈராக் அதிகாரிகளுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை பயனளித்துள்ளதாக ஐ.நா பொதுச் செயலாளர் கோபி அனான் உறுதிப்படுத்தியுள்ளார்.

எனினும், ஆயுதப்பரிசோதனையை மேற்கொள்வது தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படவில்லை எனவும் எதிர்வரும் ஏப்ரல் மாத நடுப்பகுதியில் இது போன்றதொரு பேச்சுவார்த்தை மீண்டும் இடம் பெறுமென ஈராக் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். (உ-75)

### நோர்வே அரசு

## 11 பில். அமெ. டொலரை இலங்கைக்கு வழங்கியது

(கொழும்பு)

இலங்கை இனப் பிரச்சினை தீர்வு விடயத்தில் உதவிவரும் நோர்வே அரசு இலங்கையின் தனியார் துறை மற்றும் தேசிய அபிவிருத்திக்காக பதினொரு பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

இதுபற்றிநோர்வேயின் அபிவிருத்திக் கூட்டுறவு பிரதிய அமைச்சர்கருத்துதெரிவிக்கையில், பல சவால்களைச் சந்தித்தாலும் கூட இலங்கையில் ஏற்பட்டிருக்கும் யுத்தநிறுத்தம் தொடர்ந்தும் நீடிக்கும் என நம்பிக்கை தெரிவித்த அவர்,

நோர்வே அரசு இலங்கைக்கான உதவிகளை தொடர்ந்தும் செய்வதற்குத் தயாராக வுள்ளது எனவும்தெரிவித்துள்ளார். (செ)

## விளையாட்டுச் செய்திகள்

### சமாதானத்திற்கான உதைபந்தாட்டம், இம்மாதம் 25 ஆம் திகதி

(சுண்டுக்குளி)

இலங்கை தேசிய அணி, பாகிஸ்தான் அணி ஆகியவற்றுக்கு இடையில் 'சமாதானத்திற்கான உதைபந்தாட்டம்' என்னும் தலைப்பிலான ஆட்டம் பெரும்பாலும்இம்மாதம் 25 ஆம்திகதி யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் என யாழ். உதைபந்தாட்டலீக்கின்தலைவர் கிளிபேட் அன்ரனிப்பிள்ளை தெரிவித்தார்.

பாகிஸ்தான்-இலங்கை அணிகளுக்கிடையே கொழும்பில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த 5 ஆட்டங்களில் ஒன்றே சமாதானச் சூழ்நிலைகளைத் தொடர்ந்து இங்கு நடத்தஏற்பாடு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மேற்படி போட்டியை நடத்தும் வகையில் யாழ். துரையப்பாவிளையாட்டரங்கை, இலங்கைஉதைபந்தாட்ட சம்மேளன பணிப்பில், யாழ். உதைபந்தாட்டலீக் செப்பனிட்டுவருகின்றது.

யாழ்ப்பாண வரலாற்றில், பிற நாட்டுவிளையாட்டுஅணியொன்று இங்குவந்து போட்டியில் பங்குபற்றுவது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-110)

### கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பாடசாலைகளின் கிரிக்கெட் சங்கம் நடாத்தும் 15,17 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று,

15வயதின் கீழ்'ஏ' பிரிவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அணி எதிர்மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்திலும்,

யூனியன்கல்லூரிஅணிஎதிர் உடுப்பிட்டி அ.மி.த.க அணி யூனியன் கல்லூரி மைதானத்திலும்

15 வயதின் கீழ்'பி'பிரிவில் புனித பத்திரிசியார் கல்லூரி அணி எதிர் திரு இருதயக் கல்லூரி அணி புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்திலும் புனித பரியோவான் கல்லூரி அணி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி அணி பரியோவன் கல்லூரி மைதானத்திலும்,

17வயதின் கீழ் 'ஏ'பிரிவில் விக்ரோறியாக் கல்லூரி அணி எதிர் திருஇருதயக் கல்லூரி அணி, விக்டோறியாக் கல்லூரி மைதானத்திலும்,

17வயதின் கீழ்'பி'பிரிவில் கனகரட்னம் ம.ம.வி அணி எதிர் யாழ்.இந்துக்கல்லூரி அணி கனகரட்ணம் ம.ம.வி மைதானத்திலும் மோதவுள்ளன. (உ-3)

### மென்பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை மத்திய இளைஞர் கழகம் 'கணேசா' கிண்ணத்திற்காக நடத்தி வரும் மென்பந்துசுற்றுப்போட்டியில் நாளை காலை 8-30 மணிக்கு நொதேன் (பச்சை) எதிர் யமகா,

மு.ப. 10-00 மணிக்கு கே.சி.சி எதிர் கே.சி.சி.சி

மு.ப. 11-30 மணிக்கு அல்புமேற்ஸ்ரார்எதிர்ஏசியன்,

பி.ப. 1-00 மணிக்கு அரியாலை 'பி' எதிர் நொதேன் (வெள்ளை)

பி.ப. 3.00 மணிக்கு ஜே.டி.எம்.பி. எதிர் அரியாலை 'ஏ'

பி.ப. 4-00 மணிக்கு வை.எம்.எச் ஏ எதிர் லெவன் ஸ்ரார் ஆகிய விளையாட்டுக்கழகங்கள் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் மோதவுள்ளன. (உ-106)

### தாச்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் ஆகியனவற்றின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடாத்தும் தாச்சிச்சுற்றுப் போட்டியில் இன்று பி.ப. 3-30 மணிக்கு உதயசூரியன் எதிர் அண்ணா விளையாட்டுக் கழகங்கள் மோதவுள்ளன. (உ-3)

## காஸா பகுதியில் இராணுவ நடவடிக்கை

(ஜெருசலேம்)

பலஸ்தீனத்தின் காஸா பகுதிகள் மீது இஸ்ரேலிய படையினர் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளனர்.

வடபகுதியிலுள்ள மேற்குக் கரை நகரான துர்காராமிற்கு போர் விமானங்களின் பாதுகாப்புடன் 50இற்கும் மேற்பட்ட டாங்கிகள் அந்தப் பிரதேசத்தை துவம்சம் செய்தபடி நுழைந்துள்ளன.

இந்த முன்னேற்ற நடவடிக்கைகளில்5 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட துருப்பினர் அந்தப் பகுதிகளிலுள்ள அகதிகள் முகாம்களில்நிலைகொண்டுள்ளதுடன் வீடுவீடாக சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்குக் கரையில் உள்ள இஸ்ரேலிய குடியிருப்பு ஒன்றிலுள்ள ஹோட்டல் மீது பலஸ்தீன தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்த தாக்குதலில் 5பேர் காயமடைந்துள்ளனர்.

மேற்படி சம்பவங்கள் தொடர்பாக அமெரிக்கவெளியுறவு அமைச்சர் கொலின் பவல் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல்- பலஸ்தீன பிரச்சினையில் உடனடியாக அமெரிக்காவைத் தலையிடும்படி பலஸ்தீன நிர்வாகம் கேட்டுள்ளது. (உ- 5)

## கருத்தரங்கு இன்று நடைபெறாது

(நவக்கிரி)

கோப்பாய் பிரதேசசெயலர் பிரிவைச் சேர்ந்த சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு, யாழ். மருத்துவபீட மாணவர்களால் இன்று நடத்தப்படவிருந்த டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கு, திட்டமிட்டவாறு இன்று நடைபெற மாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-232)

## இன்று ஒரு தகவல்

## சிறுகச் சிதைத்தால் மலையும் சிதையும்

பகைவரின் வலிமை வாய்ந்த பெரிய கோட்டையைத் தாக்கினான் மராட்டிய மாவீரன் சிவாஜி. அவன் எதிர்பார்த்த வெற்றி கிடைக்காதது மட்டுமல்ல, பெருந்தோல்வியுடன் பின்வாங்கினான். படை வீரர்களைவிட்டுத் தனியே பிரிந்த சிவாஜி ஏன் தோல்வி ஏற்பட்டது என்ற சிந்தனையில் ஆழ்ந்தான். நேரம் போனதே தெரியவில்லை. இருட்டிவிட்டது. பசி வேறு அவன் வயிற்றைக் கிள்ளியது. தொலைவில் விளக்கு வெளிச்சம் தெரிந்ததை வைத்து அங்கு சென்றான் சிவாஜி. சிறு குடிசையில் மூதாட்டி ஒருத்தி அமர்ந்திருந்தாள். சிவாஜியைமராட்டிய வீரன் ஒருவன் என்று நினைத்த அவள், 'சிறிது நேரம் பொறுத்திருங்கள் கஞ்சி சமைத்துத் தருகிறேன் உண்டுவிட்டுச் செல்லலாம்' என்றாள்.

சுடச்சுடக் கஞ்சியைப் பாத்திரத்தில் ஊற்றிச் சிவாஜியிடம் நீட்டினாள் அந்த மூதாட்டி. நல்ல பசியோடிருந்த சிவாஜி பாத்திரத்தின் நடுவிலிருந்து, கஞ்சியில் ஒரு கரண்டிஎடுத்து வாயில்போட்டான். சூடு தாங்காத அவன் துடித்துவிட்டான். இதைப் பார்த்த மூதாட்டி 'நீயும் உன் தலைவன் சிவாஜியைப் போலவே பரபரப்பானவனாகவும், பொறுமையற்றவனாகவும் இருக்கிறாய். சிந்தனை இல்லாமல் முயற்சி செய்து அவன் தோல்வியுற்றதைப் போல நீயும் வாயைச் சுட்டுக் கொண்டு சிறிது உணவையும் பாழாக்கி விட்டாய்' என்றாள். அதிர்ச்சியடைந்த சிவாஜி, 'அம்மா! என்னை எந்தக் குறை வேண்டுமானாலும் சொல். மாவீரன்சிவாஜியைப் பற்றி இனி ஒருமுறை அவசரக்காரன், சிந்தனை இல்லாதவன் என்று சொல்லாதீர்கள்' என்றான்.

நான் சொன்னதில் எந்தத் தவறும் இல்லை. சிவாஜி மட்டும் சிந்தித்துச் செயலாற்றி இருந்தால், இந்தப் பெருந்தோல்வி அவனுக்கு ஏற்பட்டிருக்காது. நீ எப்படிப் பாத்திரத்தின் நடுவில் உள்ள உணவில் கைவைத்துச் சுட்டுக் கொண்டாயோ. அதேபோலப் பகைவரின் பெரிய கோட்டையைக் கைப்பற்றும் முயற்சியில் அவன் தோல்வி கண்டான். நீ முதலில் ஓரத்தில் ஆறியிருக்கும் உணவைச் சிறிது சிறிதாக உண்டிருந்தால் நடுவில் இருக்கும் உணவும் அதற்குள் ஆறியிருக்கும். அதேபோல சிவாஜியும் எதிரியின் சிறு சிறு கோட்டைகளை முதலில் வென்று கடைசியாகப் பெரிய கோட்டைக்குள் போர் நடத்தியிருந்தால் இந்தத் தோல்வி ஏற்பட்டிருக்காது' என்றாள் மூதாட்டி.

தனக்கு அறிவூட்டிய மூதாட்டியை அன்புடன் பார்த்தான் சிவாஜி. 'அம்மா! நான் தான் சிவாஜி. உங்கள் அறிவுரை எனக்கு நல்ல பாடத்தைக் கற்றுத் தந்துள்ளது. இனி எந்தச் செயலில் ஈடுபட்டாலும் சிந்தித்து நிதானமாக ஈடுபடுவேன். எனக்கு வாழ்த்துக்கூறி அனுப்புங்கள்' என்று பணிவுடன் வேண்டினான் சிவாஜி.

பேராசிரியர் எ. சோதி

# பொய் வாக்குறுதிகளுடன் எம்மை வந்து சந்திப்பதை நிறுத்துங்கள்

## கூட்டமைப்பிடம் சிறைக்கைதிகள் இறைஞ்சல்

(மட்டக்களப்பு)

சிறைக்கைதிகளை கருவியாகப்பயன்படுத்தி தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும் சட்டத்தரணிகளும் ஊடகங்கள் மூலம் பிரபல்யம் தேடிக் கொள்கின்றனர். இதுவே நாம் கண்ட உண்மை,

களுத்துறைச் சிறைச்சாலையில் கடந்த ஞாயிறு முதல் சாகும்வரையிலான உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்டுவந்த தமிழ் அரசியல் கைதிகள், தமது உண்ணாவிரதப்போராட்டம் தொடர்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், ஊடகங்களுக்கும் அறிக்கைஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

அந்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த புதன்கிழமை அனுப்பிவைக்கப்பட்ட அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

கடந்த காலங்களில் இடம்பெற்ற சிறைக்கைதிகளின் போராட்டங்களின் போது தமிழ்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டத்தரணிகளும் எம்மைச் சந்தித்து பல வாக்குறுதிகளை அளித்தனர்.

ஆனால் அந்த வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

எமது நிலை தொடர்பாக அரசாங்கம் நல்லதொரு முடிவை எடுக்கவேண்டும். அரசதரப்புப்பிரதிநிதி ஒருவர் நேரடியாகவந்து பார்வையிட்டு எமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளனர்.

கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பொய் வாக்குறுதிகளுடன் எம்மை வந்து சந்திக்க வேண்டாம் என்று அந்த அறிக்கையில் அவர்கள் மேலும் உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளனர். (உ-5)

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பேக்கரிஉரிமையாளர் சங்கத்தில் கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற நெறியாளர் குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கிணங்க நாளை ஞாயிற்றுக்கிழமை சங்க அலுவலகத்தில் சகலஅங்கத்தவர்களுக்குமான அவசரகலந்துரையாடல்ஒன்று நடைபெறவுள்ளது. (உ-3)

## மகளிர் தினத்தை ஒட்டிய கட்டுரைப்போட்டிமுடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர்தினத்தையொட்டி யு. என். எச். சி. ஆர் நிறுவனத்துடன் இணைந்து மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்திய கட்டுரைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வேறாகவும், பாடசாலை மாணவர்களுக்கு வேறாகவும் நடத்தப்பட்ட இப்போட்டி முடிவுகளின் விபரம் வருமாறு,

யாழ். பல்கலைக்கழகம்

முதலாம் இடம்; பி. தர்மினி

இரண்டாம் இடம்;

கே. செந்தில்மதி

மூன்றாம் இடம்: ஏ. ரகுபதி

க. பொ. த உயர்தர வகுப்பு

முதலாம் இடம்:

ஜே. ஜெயப்பிரபா

இந்து மகளிர் கல்லூரி

இரண்டாம் இடம்:

ஜீ. டிலானி பவித்திரா

யாழ். வைத்தீஸ்வர கல்லூரி

மூன்றாம் இடம்:

இ. இரமா வித்யா

யாழ். வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை

க. பொ. சாதாரண வகுப்பு

முதலாம் இடம்;

ரி. யாழினி

யாழ். அருணோதயாக் கல்லூரி

இரண்டாம் இடம்:

எம். மேரி நிரோஜினி

வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை

மூன்றாம் இடம்:

ஆர். லக்ஷன்

யாழ். இந்துக் கல்லூரி

பரிசு பெற்றவர்கள் மற்றும் போட்டியில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ்கள் நேற்றையதினம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் வைத்து வழங்கப்பட்டன. (உ)

## குளியாப்பிட்டியில் எரிந்த நிலையில் இரு இனந்தெரியாத சடலங்கள்

(கொழும்பு)

குளியாப்பிட்டி பன்னலகங்காணிமுல்லகாட்டுப் பகுதியில் கடந்த புதன்கிழமை நள்ளிரவு இருவர் இனந்தெரியாதவர்களால் கொலை செய்யப்பட்டு தீயிட்டுக் கொளுத்தப்பட்டனர்.

இந்த இருவரினதும் சடலங்கள் மிகவும் உருக்குலைந்த நிலையில் காணப்படுகின்றதனால், சடலங்களை அடையாளம் காண முடியாத நிலை காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ

## சாந்தி சமாதானம் வேண்டி திரவ்ய ஹோம யாகம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட சமாதான ஒப்பந்தம் வெற்றி பெறவும், நாட்டில் வரட்சி நீங்கி நல்லமழை பொழியவும் அமைதி, சாந்தி சமாதானம் நிலவ இறையருள் வேண்டியும் சபரிமலை ஸ்ரீஐயப்பசாமிக்கு விசேட திரவ்ய ஹோம யாகம்இன்று காலை 6 மணிமுதல் 8மணி வரை கொச்சிக்கடை ஸ்ரீசித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வவிநாயகர் ஆலயபிரதம குரு சிவாகமபூஷணம் பிரம்ம ஸ்ரீ பா. ஷண்முக ரெட்ண சர்மா நவாலியூர் பிரதிஷ்டா சிரோமணி பிரம்ம ஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் ஆகியோரின் அருளாசியுடன்சர்வ இந்துமத குருபீடாதிபதி கலாநிதி ஸ்ரீஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் இக் கிரியைகள் நடைபெறவுள்ளன. (உ-3)

## 309 தபால் பொதிகள் எடுத்து வருகை

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் காங்கேசன்துறை வந்தடைந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்க நோயாளர் கப்பலில் குடாநாட்டிற்கான 309 வெளியூர் தபால் பொதிகள்எடுத்துவரப்பட்டன.

அதேசமயம், இங்கு சேகரிக்கப்பட்ட101தபால்பொதிகள் அக்கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பிரதம தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (உ- 3)

## அனுருத்தவின் மகனிடம் புலனாய்வு விசாரணைகள்

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் மூன்றாவது புதல்வனான மஹேன் ரத்வத்தையை குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் நேற்று முன்தினம் 4 மணிநேரம் விசாரணை செய்துள்ளனர்.

இவ்விசாரணையின் போது அவரிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலம் சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மஹேன் தனது சகோதரர்களாகிய லோகான், சாணுக்க ஆகிய இருவருக்கும் இருப்பிடமளித்து பாதுகாப்பு கொடுத்தார் என்பதன் அடிப்படையிலேயே புலனாய்வுப் பிரிவிற்கு அவர் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

மடவளை படுகொலைகளின் சந்தேக நபர்களான லோகானுக்கும், சாணுக்காவிற்கும் பாதுகாப்பும் தங்குமிட வசதிகளும் அளித்தார்கள் என்று மேலும் 4 பேரை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தேடி வருவதாகவும் அச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அனுருத்த ரத்வத்தை, லோகான், சாணுக்க உட்பட மேற்படி கொலைகளின் சந்தேக நபர்களான 32 பேர் தெல்தெனிய நீதிபதி இனோக்காரணசிங்காவினால் மார்ச் 18 ஆம் திகதிவரை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளமை ஏற்கனவே தெரிந்ததே. (எ)

## அரிசி இறக்குவது தாமதம் கூ.சங்கங்கள் ஏமாற்றம்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் வழங்குவதற்குரிய அரிசிகப்பலில் இருந்து இறக்குவதில் ஏற்படும் தாமதத்தினால் அரிசியை ஏற்றுவதற்காக கோண்டாவிலில் உள்ள களஞ்சியத்திற்கு வரும் சங்க லொறிகள் வீணாகத் தரித்து நிற்கவேண்டியுள்ளதாக சங்க வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

கப்பலில் இருந்து அரிசி இறக்கப்படுவதில் ஏற்படும் தாமதத்தால் பெப்ரவரி மாத நிவாரணம் இன்னமும் வழங்கப்படவில்லை.

இதேவேளை பெப்ரவரி மாதத்திற்குரிய நிவாரணம் வழங்கப்படாத நிலையில் மார்ச்மாதநிவாரணம்வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகும், திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் பிரபல ஆங்கில இலக்கிய கர்த்தாவான **ANTHONY BURGESS** இன் திரைக்கதையை அடிப்படையாகக் கொண்டு**FRANCO ZEFFIRE-LLI** இயக்கிய **JESUS OF NAZARETH** என்ற திரைப்படம் இன்றும் அடுத்த சனிக்கிழமையும் இருபாகங்களாக காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும் பங்குபெறலாம் என புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

## சிறுவர் பாதுகாப்பு நிதிய யாழ். திட்ட அலுவலர் நேபாளம் பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிகழ்ச்சித் திட்ட அலுவலர் ஜெ. தற்பரன் நேபாளத்தில் நடைபெறும் சிறுவர் உரிமை மாநாட்டில் கலந்து கொள்ளுவதற்காக நேற்று முன்தினம் கொழும்பு பயணமானார்.

நேபாளத்தில் எதிர்வரும் 25,26,27,28ஆம்திகதிகளில் நடைபெறும் அபிவிருத்திக்காக அரங்கைப் பாவித்ததில் மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பான மாநாட்டில் இவர் பங்குபற்றவுள்ளார். (உ-5)

## சிந்தனைக்கு விருந்து

### களவைக் கூறவும் அஞ்சுகிறார்

வளவி னெல்லையினில் நின்ற பூவரசு
வளர்ந்து மேதமது காணியின்
அளவி னைச்சுருக்க அளவிலாச் சினத்தை
உற்று நீதிமன்று சென்றவர்
களவு செய்துதம தில்லஓடு யன்னல்
கதவு கொண்டு சென்ற பேர்களில்
விளையும் வெஞ்சினத்தை வென்று மற்றவர்க்கு
விளம்ப அஞ்சி நடுங்குவார்!

-பழையவன்-

# யாழ் பொலிஸார் நடத்தும் கரபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் யாழ் பொலிஸ்பிரிவிற்குட்பட்ட கழகங்கள்பாடசாலைகளுக்கிடையில் கரபந்தாட்டப் போட்டியினை நடத்தி பெறுமதி மிக்கபரிசில்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச்செய்துவருவதாக மேற்படி நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் இம் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை பொறுப்பதிகாரி யாழ்ப்பாணப் பொலிஸ்நிலையம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

கழகம் மற்றும் பாடசாலையின் பெயர், பிரிவு (15வயதின் கீழ், 19வயதின்கீழ்) முகவரி, ஆண்கள் அணியா? பெண்கள் அணியா? என்ற விபரங்களை தமது விண்ணப்பத்தில் பூர்த்தி செய்து பாடசாலையாயின் அதிபர், கழகங்களானால் தலைவர் கையொப்பத்துடன் அனுப்பி வைத்தல் வேண்டும். (எ)

# லயன்ஸ் கழகங்களின் பிராந்திய கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இன்று உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள லயன்ஸ் கழகங்களின் பிராந்தியக் கருத்தரங்கில் சர்வதேச லயன்ஸ் கழகங்கள் மாவட்டம் (306B) ஆளுநர் லயன் உபாலி சமரசிங்காவும் துணைவியாரும் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

பிராந்தியத் தலைவர் லயன் செ.ஞானராசாவின் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில்,

யாழ். மக்களுக்கு வழங்குவதற்கு மூக்குக் கண்ணாடிகளையும், கண்வில்லைகளையும் கொழும்பிலிருந்துஎடுத்து வந்துள்ளனர்.

பிராந்தியம் 10இல் இயங்கும் கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், கோவில்பற்று, நல்லூர், வட்டுக்கோட்டை ஆகிய சழகங்களின் கடந்த காலச் செயற்பாடுகள் மதிப்பீடு செய்யப்பட்டு திறம்பட செயலாற்றிய கழகங்களுக்கு விருது வழங்கப்படவுள்ளன.

கொழும்பு நகர லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் லயன் எம். கேசவராசா மூலம் வறிய 21மாணவர்களுக்கு புலமைப் பரிசில்நிதியை இலங்கை வங்கி யூடாக வழங்க நடவடிக்கைமேற்கொள்ளப்படவுள்ளது. (எ)

# காணாமற்போனவர்கள் யாழ். குடாவில் இல்லை

(யாழ்ப்பாணம்)

கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து படையினர் எந்த வித கைது நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை என்பதை பலாலி படைத்தள பதில் கட்டளை அதிகாரி ஜே. டி. எ. குணசேகர இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் என்பவற்றுக்கு கடிதமூலம் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை அரசும் புலிகளும் யுத்தநிறுத்த அறிவிப்பை வெளியிட்ட காலப் பகுதியில் இருந்து காணாமல் போனோர் மற்றும் கைது செய்யப்பட்டோர் தொடர்பான முறைப்பாடுகள் எவையும் தமக்குக் கிடைக்கவில்லை எனவும் காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமில் தற்போது எவரும் தடுத்து வைக்கப்பட்டிருக்காத காரணத்தினால் அங்கு செல்லவேண்டிய தேவைப்பாடு தற்போதைக்கு இல்லை எனவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி என். ஜீவேஸ்வரா தெரிவித்தார். (உ-9)

# வாக்காளர் அட்டை விநியோகப் பணி திங்கள் முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளை தரம்பிரிக்கும் பணிகள் யாழ். பிரதம தபாலகத்தில் தற்போது நடைபெற்று வருகின்றன.

இப்பணிகள் நாளைய தினம் வரை இடம்பெறும் எனவும் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் விநியோகம் இடம்பெறும் எனவும் பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தரம் பிரிக்கப்படும் சுமார் ஒரு இலட்சம் வாக்காளர் அட்டைகள் 20 ஆம் திகதிக்கு முன்னர் விநியோகித்து முடிக்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-19)

# சுவரொட்டிகள் மேல் எதிரான வாசகங்கள்

(கொழும்பு)

'விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி அரசியல். தீர்வுத் திட்டத்தை முன்வைத்து நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துக!' என்று குறிப்பிட்டு சமாதானத்துக்கான ஊடகவியலாளர் அமைப்பு கொழும்பில் பல இடங்கள் ஒட்டிய தமிழ், சிங்கள மொழியிலான சுவரெட்டிகள் மேல்,

ஜே.வி.பி. அமைப்பினர் சமாதானத்திற்கு எதிரான வாசகங்களை பொறித்துசமாதான முயற்சிகளைக்குழப்பும் நடவடிக்கைகளில்ஈடுபட்டுவருவதாக சமாதானத்திற்கான ஊடகவியலாளர் அமைப்பு கண்டித்துள்ளது.

இதுகுறித்து ஜே.வி. பியின் பிரசாரச் செயலரிடம் மேற்படி அமைப்பினர் தொலைபேசி மூலம் சுட்டிக்காட்டிய போது அவர் தொலைபேசி இணைப்பைத் துண்டித்து விட்டதாகவும் கூறப்படுகிறது. (உ)

# பதிவு செய்யவும்

(தென்மராட்சி)

இதுவரை பதிவுகளைச் செய்து இலவசத் தென்னம்பிள்ளைகளைப் பெறாத மந்துவில் மேற்கு பகுதி மக்கள் இன்று மு.ப.10.00 மணிக்கு மீசாலை வடக்கு கமநலச் சேவைகள் நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம் என விவசாய சம்மேளனத் தலைவர் ஆ.சிவபாதசுந்தரம் அறிவித்துள்ளார். (உ-77)

## பேருந்து சேவை சீரில்லை

(அராலி)

787 ஆம் இலக்கபாடசாலை பேருந்துச் சேவை சீராக நடைபெறுவதில்லை.

இது குறித்து பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் உரிய தரப்பினரிடம் சுட்டிக்காட்டி நீண்ட நாட்களாகியும் இன்னும் தீர்வு எதுவும் காணப்படவில்லை. (உ- 217)

## நூல்வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய பழைய்மாணவர் சங்க ஏற்பாட்டில் ஓய்வு பெற்ற அதிபர் அமரர் க. தங்கராசா அவர்களின் ஞாபகார்த்தமாக ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை வாழ்க்கைச் சரித்திரம் நூல்வெளியீட்டு வைபவம் இன்று கலை 9. 30 மணியளவில் உரும்பிராய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் அதிபர் க.கனகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற அதிபர் சி.நடராஜா தொடக்கவுரையையும் உரும்பிராய் இந்துக்கல்லூரி அதிபர் அ. ஈஸ்வரநாதன் வெளியீட்டுரையையும் நிகழ்த்துவர். (4)

# இராசி பலன்

9.3.2002
(மாசி 25, சனி)
ஏகாதசி பி·இ1-25வரை
உத்தராடம் முழுவதும்
ராகுகாலம்-9.24-10.54
நல்லநேரம்-3-24-4.54
ஏகாதசி விரதம்

**மேடம்**
செய்தொழில்மேன்மை, நல்ல சம்பவம். தூரதேசச் செய்தி, காரியம்கைகூடும்.

**இடபம்**
புதியதீர்மானம், காரியதாமதம், கட்டுப்பாடு, பிரயாணம்.

**மிதுனம்**
வீண்தொல்லை, முயற்சி தாமதம், புதிய திருப்பம், உடல்வியாதி,

**கடகம்**
திடீர்பயணம், நண்பர்கள் சந்திப்பு, காரியசித்தி, தனவரவு.

**சிங்கம்**
தர்மம், சத்துருஜெயம், காரிய அனுகூலம், தொழில் முன்னேற்றம்.

**கன்னி**
பெரியோர்மதிப்பு, சொத்துப்பிரச்சினை, முயற்சி தாமதம், தொழில்நன்மை.

**துலாம்**
தாய்வழிஉறவு, ரோகபயம் இனசனத்தொடர்பு காரிய தாமதம்.

**விருச்சிகம்**
இனிய சம்பவம், வாக்கு மேன்மை, முயற்சிகைகூடும், பிரயாணநன்மை.

**தனுசு**
சகோதரர் உதவி, வீண் விவாதம், முயற்சி தாமதம் மாதர்நட்பு.

**மகரம்**
நல்ல முயற்சி, அதிகாரம், புதிய பொருள் சேர்க்கை, காரியம்கைகூடும்.

**கும்பம்**
உஷ்ணவியாதி, காரிய அலைச்சல், சுபகாரியச்செலவு திடீர்நன்மை.

**மீனம்**
கீர்த்தி, காரியம்கை கூடும், குடும்பமகிழ்ச்சி, பொருள் சேர்க்கை.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# பேருந்து விபத்தில் 16 பேர் உயிரிழப்பு

## எகிப்தில் சம்பவம்

(ஹெய்ரோ)

எகிப்தில் இரண்டு தனியார் பஸ்கள் நேருக்குநேர் மோதியதில் 16 பேர் ஸ்தலத்தில் பலியாகியுள்ளனர். மேலும் 14 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இதேசமயம், பலியான 16 பேரும் ஒரே கம்பெனியில் வேலை புரிந்தவர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-7)

# மக்கள் வங்கியில் அதிகாலை தீ விபத்து

(கொழும்பு)

கொழும்பு சென்றல் வீதியில் அமைந்துள்ள மக்கள்வங்கியின் இரண்டாம் மாடியில் நேற்று அதிகாலை தீவிபத்து ஏற்பட்டுள்ளது,

வங்கியின் முக்கியபகுதிகளுக்குள் தீபரவும் முன்னர் வங்கி அலுவலர்கள் தீயணைப்பு படையினர் தீயினை கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளனர்.

தீபரவியமை குறித்து விசாரணைகள் நடத்த கொட்டாஞ்சேனை பொலிசார் விசேட புலனாய்வுப் பிரிவை சம்பவ இடத்திற்கு அனுப்பி வைத்தனர்.

இது தொடர்பாக வங்கி அதிகாரிகள் காவல்காரர்கள் பொலிசாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். (உ-7)

# இருவரைச் சுட்டுக் கொன்ற பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் தானும் தற்கொலை

(கொழும்பு)

சியம்பலாண்டுவ சோதனைச்சாவடியொன்றில் பணிபுரிந்த றிசேவ் பொலிஸ்சப் இன்ஸ்பெக்டர், ஊர்காவல் படைவீரரையும் துணைப் படைவீரர் ஒருவரையும் சுட்டுக்கொன்று விட்டுத் தன்னைத் தானே சுட்டு தற்கொலைசெய்துள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை எத்திமலை காவலரணில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மொனராகலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ5)

# 20 வது ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் 20 ஆவது ஆண்டு விழாநாளை காலை 9.30 மணிக்கு மானிப்பாய் பிரதேசசபை கலாசார மண்டபத்தில் பிராந்திய சபை உபதலைவர் யே. காணிக்கைநாதன் தலைமையில் நடைபெறவுளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிதென்மேற்கு பிரதேச செயலர் வேதநாயகனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கே. சிவராஜா, முன்னாள் கோட்டக் கல்வி அதிகாரி கோ.சி. வேலாயுதம் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத் தலைவர் நா.தங்கவடிவேல், செயலாளர் வே.ச சின்னையா பிரதம பொருளாளர் சி. நாகேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ 3)

## கணிப்பீட்டு நிகழ்ச்சித்திட்ட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வி வலயத்திற்கு உட்பட்ட தரம் 10, 11ஆகிய வகுப்புக்களுக்கு விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டச் செயலமர்வு இன்றும் எதிர்வரும் திங்கள்கிழமையும் காலை 9மணி முதல் பி. ப 4. 30 வரை யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவுளது.

இன்று யாழ் கோட்டம் மற்றும் கோப்பாய் உரும்பிராய்க் கொத்தணிப் பாடசாலைகளுக்கும்.

நாளை மறுதினம் திங்கட்கிழமை நல்லூர்க் கோட்டம் மற்றும், நீர்வேலி, அச்சுவேலிக் கொத்தணிப் பாடசாலைகளுக்கும் இச்செயலமர்வு இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-19)

# மரண அறிவித்தல்

## திருமதி கூரியதாஸ் றீற்றா (சுதா)

புளியங்கூடல் 3ம்வட்டாரம் சின்னமடுவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கூரியதாஸ்றீற்றா 8.03.2002 (வெள்ளிக்கிழமை) நேற்றுகாலமானார்

அன்னார் சவரிமுத்து கூரியதாஸ்(சவுதி) இன் அன்பு மனைவியும் அறுக்காஞ்சி அந்தோனி, திரேசம்மா தம்பதிகளின் மகளும் சவரிமுத்து சிவகாமி தம்பதிகளின் மருமகளும் ஆவார்

காலஞ்சென்ற தெய்வேந்திரன் (ஆசிரியர்), வேதநாயகம் (சமுர்த்திஅலுவலர்வேலணை) அன்னமேரி, மரியராஜா (தலைவர் சின்னமடுமாதா ச.ச.நிலையம்) ஜோன்சகாயம், றோசாராணி, திருநீலன், ஜெனிபர் ஆகியோரின் சகோதரியும் வரதகிறிஸ்துராசா வேதநாயகம், மரீனா, அக்னேஸ் பூரணம், பாலகி, புஸ்பராணி, பூலோகராகினி, நாகேஸ் வரன்சாந்தி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (இன்று) 9.3.2002 பி.ப 2மணியளவில் நாரந்தனை சேமக்காலையில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சின்னமடு
3ம்வட்டாரம்
புளியங்கூடல்

தகவல்
செ ஜோன்சகாயம்
எஸ்.சிவம் (சகோதரர்கள்)

(3684)

தூங்காமை கல்வி துணிவுடைமை இ் மூன்றும்
நீங்கா நிலனாள்பவர்க்கு
- குறள்

# வலம்புரி

## ரணில் தந்த நம்பிக்கை

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து சாதகமான முறையில் ஆராயப்படுமென பிரதமர் ரணில்விக்கிரம சிங்கா தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பினரிடம் தெரிவித்துள்ளார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தை நடை பெறவேண்டுமாயின் இரு பிரதான விடயங்கள் நடந்தாக வேண்டும் அவை;

i அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையேகைச் சாத்தான புரிந்துணர்வு ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைப் படுத்தப் படல்.

ii விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப் படுதல். இவை இரண்டும் சாத்தியப்படும்போதே சமாதானப் பேச்சுவார்த்தை சாத்தியப் படும். இதில்புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைப் படுத்தும் விடயத்தில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் சமபங்குண்டு. எனினும் புரிந்துணர்வுஒப் பந்தத்தில் யாழ்- கண்டி வீதி (ஏ 9)யைத் திறப்பதில் புலிகள் பச்சைக் கொடியைக் காட்டிவிட்டனர். இப்போது பந்துஅரசின் பககம் இதில் புலிகளின் பணிநிறைவடைந்து விட்டது.

இதேவேளை புலிகள் மீதான தடையை நீக்கும் விடயத்தில்முழுப் பொறுப்பும் அரசின்பக்கமே. இதிலும் புலிகளின் பக்கம் பந்து இல்லை. இந் நிலையில், சமாதானப்பேச்சின் ஆரம்பிப்பு அரசின் கையிலேயே தங்கியுள்ளது.

பாதை திறப்பில் அரசுக்கு இராணுவத்தின் தடை இருப்பினும் அது தென்னிலங்கை இனவாதிகளிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தாது. ஆனால், புலிகள் மீதான தடையை நீக்கும்முடிவை அரசு எடுக்கும்போதுஇனவாதிகள் ஆர்ப்பாட்டம் செய்வது தவிர்க்க முடியாது. அதேநேரம் புலிகளின் தடையைநீக்காவிட்டால் சமாதானப் பேச்சு இடம்பெறாதுஇத்தகைய தார் சூழ் நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக புலிகளின் தடையைநீக்குவது குறித்துச் சாதகமான முடிவு எடுக்கப்படுமென பிரதமர் ரணில் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பிடம் தெரிவித்திருப்பது சமாதானப் பேச்சு நடைபெறும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

# கவிஞர் சுகசீவனின் 'அறிவுக் கதம்ப மாலை' நூல்

# மாணவ சமூகத்திற்கு புத்தறிவையூட்ட வல்லது

### திறனாய்வுக் களம்


செல்வி
**இராமலிங்கம் இராசமலர்**
B. A.; Dip.
இந்து சமய ஆசிரிய ஆலோசகர்
தென்மராட்சி கல்வி வலயம்


கச்சாயூர்ப் பண்டிதரும், கவிஞரும், முன்னாள் பாடசாலை அதிபரும் ஆகிய சுக. சீவரத்தினம் ஆக்கிய 'அறிவுக் கதம்ப மாலை' (கவிதைகள், கட்டுரைகள், சொற்பொழிவுகள் விவாதங்களின்கோர்வை) என்னும் நூல் கச்சாய் தமிழ் இலக்கிய மன்ற வெளியீடாக வெளிவந்துள்ளது.

**இறையுணர்வு உண்டாகும்**

''அறிவுக் கதம்பமாலை'' என்னும் இந்த வெளியீடு ஒரு தனித்தன்மை வாய்ந்தது. நூலின் முகப்பட்டை பின் அட்டைகளிலுள்ள பட விளக்கமும் கவிதைகளும், பார்த்த அளவில் நூலின் பெறுமதியை சிறப்பினை இனங்காட்டி நிற்கின்றன. அவர்தம் ஆசிரியத்துவத்துக்கும் வாண்மைக்கும் ஏற்புடையதாக அவர்தம் படைப்புக்கள் மிளிர்கின்றன. தெய்வீகப் பாடல்களைச் சிறந்த முறையில் நெறிப் படுத்தி, இறுதிப் பாடலாக ''இறையுணர்வு'' என்ற கவிதையில் அம்புலியில் அடியெடுத்து வைத்தால் என்ன என்று ஆரம்பித்து விஞ்ஞான விந்தைகள் 'நவம் நவமாய்ப் புலர்ந்தாலும் இறையுணர்வு என்பதனை எம்மவர்கள் இவ்வுலகில் எண்ணாவிட்டால் என்னபயன்?என்னபயன்?எதுவும் இல்லை' என நிறைவு செய்யும் பாடல் இன்றைய சமுதாயம் செல்லும் ஆஸ்தீக உணர்வற்ற பாதைக்குத் தடைபோட்டு எவரும் வெள்ளை உளம்பேண விருப்பமாய் ஒரு சமயக்கொள்கையிலே நிற்கத் தூண்டுவது கண்கூடு.

**கற்போர்க்குகந்தது**

ஆரம்பமாகக்கல் விப்பயன், சுத்தம் சுகம் தரும், ஒழுக்கம் உயர்வுதரும் என்பன போன்றவை தரம் 6-8 வரை உள்ள மாணவர்க்குப் பெரிதும் பயன்தருவதுடன், தொடர்ந்துவரும்கட்டுரைகள் தரம் 9-13 மாணவர்க்கும் பயன்தருவது மட்டுமன்றி, ஆசிரிய மாணவர், கல்வியியற் கல்லூரி, ஏன்? பல்கலைக் கழக கலைப்பீட மாணவர்க்கும் கற்றறிந்த பெரியோர்க்கும் பயன் தரக்கூடிய வகையில் மணிமகுடமிட்டு வரையப்பெற்றுள்ளன என்றால் மிகையாகாது.

இன்றைய பாடசாலை மாணவர் தம் கணிப்பீட்டுக்குரிய படையல்களின் வழிகாட்டல்கள் இந் நூலில் பேணப்பெற்றுள்ளன. உதாரணமாக 'அணிநடை' என்ற தலைப்பில் மூன்றும், 'பரதியின் இலட்சியப் பெண்' என்ற தலைப்பில் இரண்டும் 'கடற்கரைக்காட்சி கவிதை வடிவில்' மூன்றும் உற்று நோக்கி உவக்கப் பாலன. விந்தையே விஞ்ஞானம் என்ற கட்டுரை மிகவும் தரமானது.

நூல்: அறிவுக் கதம்ப மாலை
ஆசிரியர்: கச்சாயூர்ப் பண்டிதர், கவிஞர் 'சுகசீவன்'
வெளியீடு: கச்சாய்த் தமிழ் இலக்கிய மன்றம்
விலை: ரூபா 100/-

தொடர்ந்து வரும் சொற்பொழிவுகளான 'தந்தை, தாய், பேண்', மகாத்மா காந்தி, 'குறள்நெறி' புடம் போட்ட புதுமையாக்கங்கள். 'நவராத்திரி சிறப்புக் கவிதையை' வைத்து கனிஷ்ட இடைநிலை மாணவர் மட்டுமன்றி, உயர்தர வகுப்பு மாணவரும் துணிவாக 'சைவ சமயக் கொண்டாட்டம் ஒன்று' என்ற தலைப்பில் கேட்கப்படும் கட்டுரையைக் கூட எளிதாக எழுதிவிடுவர். பாரதிபற்றிக் கேட்டாலும் இனிது எழுதலாம் 'கதைப் பாட்டு ஒன்றும் காலைக்காட்சியினைக் கட்டுரை கவிதை இரு வடிவிலும் காண்கிறோம். 'இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள்' கட்டுரையும் இவர்களே எதிர் காலத்தை உருவாக்கும் சிற்பிகள், என்ற கவிதையும் உண்மையினைப் புடம் போட்டு எழுதப்பெற்றவை என்பதைமனங்கொள்ளலாம்.

மலைபற்றிய இலகு தமிழ்ப் பாடலும், தென்றல் பற்றி 'தொல்லை துளியில்லை' என்ற கற்பனைப் பாவும் ஐம்பொறிகள் பற்றி எழுதியவையும் இறுதியாக நூலில் தரப்பட்டுள்ள விவாதங்கள் இரண்டும் கூடச் சிறப்பானவையே.

**மாணவர் சமூகம் புத்தறிவு பெறும்**

இந்நூலாகிய 'அறிவுக் கதம்ப மாலைக்கு' நல்லை திருஞானசம்பந்த ஆதீனக்குரு முதல்வர் வழங்கிய அருள் ஆசிச் செய்தியில் 'இந்நூல் சிறுவர்கள் முதல் முதியோர் வரைபடித்துச் சுவைத்து மகிழ்வதற்கு விருந்தாக அமைந்துள்ளது' எனக் குறிப்பிடுகின்றார். மற்றும் அணிந்துரை எழுதிய க. சிவராமலிங்கம் எடுத்துக் கொண்ட பொருளைவிட்டு இம்மியும் விலகாது நூலாசிரியர் எழுதியுள்ள ஆக்கங்கள் யாவுமே இன்றைய எதிர்கால மாணவச் சமூகத்துக்கு ஏற்ற புத்தறிவை ஊட்டும் என்பதில் ஐயம் இல்லை, எனக் குறிப்பிட்டுள்ளார். வாழ்த்துரையில் பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலை அதிபர் 'சுமார்' முப்பது ஆண்டுகளுக்கு மேலாக 'சுகசீவனார்' கல்வி உலகிற்கு அர்ப்பணித்த ஆசிரிய, அதிபர் சேவைகளினால் பெற்ற பாரிய சிறந்த அனுபவங்களே இந்நூலின் வெளிப்பாடு என்கின்றார். இம் மூவர் கூற்றுக்களும் உண்மையான உண்மைகளே ஆகும்.

கச்சாயூர்ப் பண்டிதர், கவிஞர் சுகசீவனின் 'அறிவுக் கதம்பமாலை' அறிவுதரும் அன்புசுரக்கும், அருள் மிதக்கும், ஆக்கம் பெருக்கும் எனவே அவரை வாழ்த்தி நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம். ■

# தமிழ் மக்களுக்கு உறுதியான கௌரவமான தீர்வு வேண்டும்

## தலைவர் பிரபா வலியுறுத்தல்

(மல்லாவி)

சமாதான முன்னெடுப்புகள் வெற்றிகரமாகவும், சுமுகமாகவும் மேற்கொள்ளப்படுவதற்கு ஆரம்ப கட்ட நடவடிக்கையாகவும் முக்கிய நிகழ்வாகவும் தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் சர்வதேச கண்காணிப்புக் குழுவுடனான சந்திப்பு அமைந்துள்ளது.

இவ்வாறு தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் சமாதானக் குழுவிடம் தெரிவித்திருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் புலிகளின் குரல் வானொலிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் சு.ப.தமிழ்ச் செல்வன் மேலும் தெரிவித்திருப்பதானது;

தமிழ் மக்களிடையே உள்ள வாழ்வு இயல்பு நிலைக்குக் கொண்டுவரப்பட வேண்டும். இதற்கு முக்கியமாக ஏ 9 கண்டி வீதியை திறந்துவிட வேண்டும்.

தமிழ் மக்களைப் பொறுத்தளவில் போக்குவரத்து ஒழுங்கு மிகவும் அவசியமாகும். இதனால் யாழ்-கண்டி வீதி திறக்கப்படும் என்ற நம்பிக்கை மக்கள் மனதில் ஏற்பட்டுள்ளது.

எமது மக்களுக்கு உறுதியான, கௌரவமான, மகிழ்ச்சிகரமான சமாதானம் தேவை என்பதை தேசியத் தலைவர் வே. பிரபாரகன் அக்குழுவினருக்கு வற்புறுத்திக் கூறியுள்ளார். (வ

## தினசரி தியானம்



### ஆயத்தம்

வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனையது உயர்வு.

- திருக்குறள்

ஒய்வில்லாதுஓடும் காலம், நாள் தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது. நலத்தின் பொருட்டு என்னை நான் ஆயத்தப் படுத்துவேனாக.

தொடர்ந்து செய்யும் ஆயத்தந்தான் பிறகுகாரிய சித்தியாக வடிவெடுக்கிறது. புஷ்பம் ஒன்று நிஷ்காரணமாய் வந்து விடவில்லை. காரண காரியத்தின் நிறைவு மலராக வடிவெடுக்கிறது. தொடுத்தகருமத்தைவெறும் விருப்பத்தால் நிறைவேற்றி விட முடியாது. முறையாக அதற்கு முயலவேண்டும். நன்கு முடிக்கப் பெற்ற ஒவ்வொரு சிறுசெயலும் பெரிய செயலுக்கு மனிதனை ஆயத்தப்படுத்துகிறது.

- ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்



## தவக்கால கிறிஸ்தவ சிந்தனைகள் (25)

**தவக்காலம் மூன்றாம் வாரம் (ஊதா)**

**திபா 51:3-4, 18-21. 'பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்'**

மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள் குணம் பெற முதல்படி 'தங்களிடம் சில குறைபாடுகள் இருக்கின்றன' என்பதை ஏற்பதாகும். இரண்டாவது படி 'இக்குறைபாட்டில் இருந்து விடுபட வேண்டும்' எனும்ஆவலும் 'விடுபட முடியும்' எனும் நம்பிக்கையுமாகும்.

ஆன்மீகக் குறை நீங்கி நிறைவு பெறஆலயத்திற்குச் சென்றவர்களில் 'தன்னிடம் குறையில்லை' என்று நினைத்த பரிசேயன் ஆன்ம நோயுடனும், என் 'மனக் குறைநீக்கி என்மேல் இரக்கம் வையும்' என்றுவேண்டிய ஆயக்காரன் நோய் நீங்கி நலமுடனும் திரும்புகின்றனர். தவக்காலம் ஆன்ம நோயினின்று விடுதலை தரும் காலம். நிறைவு நல்கும் தெய்வத்திடம் நம்மை முழுமையாய் அர்ப்பணிப்போம்.

- காவலன்

COMMERCIAL BANK

## கொமர்ஷல் வங்கி யாழ்.கிளையின்

# அருணலு வாரம்

ஒக்டோபர் 1ம் திகதி உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு கொமர்ஷல் வங்கியால் அருணலு வாரம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் பிரகாரம், இவ் அருணலு வாரத்தில் ஆரம்பித்த கணக்குகளுக்கு ஏற்ப திருநெல்வேலி சைவச்சிறுவர் இல்லத்தைச் சார்ந்த 77 ஆனாதைச் சிறுவர் சிறுமிகளுக்கும், மானிப்பாய் மகேஸ்வர இல்லத்தைச் சார்ந்த 17 ஆனாதைச் சிறுவர்களுக்கும் கொமர்ஷல் வங்கி யாழ்.கிளை வைப்புத்தொகையை இட்டு அருணலு சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்து அவர்களின் எதிர்கால வாழ்வு வளம்பெற அத்திவாரத்தை இட்டுள்ளது. இதனை முன்னிட்டு அண்மையில் வங்கிக் கிளையில் வைப்புப் புத்தகங்களையும், பரிசில்களையும் கையளிக்கும் வைபவம் இடம்பெற்றது.



திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லத்தின் தலைவர் பேராசிரியர். சண்முகதாஸ் அவர்கள் முகாண்மயாளர் திரு. எஸ். இரவீந்திரா அவர்களிடம் இருந்து சேமிப்பு புத்தகங்களை பெற்றுக் கொள்வதைக் காணலாம்.



மானிப்பாய் மகேஸ்வர இல்லத் தலைவர் திரு. லயன். பத்மநாதன் அவர்கள் முகாமையாளரிடம் இருந்து சேமிப்பு புத்தகங்களை பெற்றுக் கொள்வதைக் காணலாம்.



அநாதைச் சிறுவர்களுக்கு ஒரு தொகுதி அப்பியாசப் புத்தகங்களை முகாமையாளர் வழங்குவதனையும் சிறுவர்கள் சார்பாக சைவ வித்தியாவிருத்தி சங்கத் தலைவர் பேராசிரியர். சண்முகதாஸ் அவர்களும், சிறுவர் இல்லத் திட்டப்பணிப்பாளர் கலாநிதி. திருமதி மனோன் மணி சண்முகதாஸ் அவர்களும், செயலாளர் திரு. சோ. பத்மநாதன், உறுப்பினர் லயன். கே. துரைரத்தினம் அவர்களும் பெற்றுக் கொள்கின்றார்கள்.

## அருணலு சிறுவர்களுக்கான 5ம் ஆண்டு புலமைப்பரிசில் ஊக்குவிப்பு



5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் 1ம், 2ம், 3ம் இடங்களைப் பெற்றுக் கொண்ட மாணவிகளுக்கு பெறுமதிவாய்ந்த பணப்பரிசில்களும், பரிசுப் பொருட்களும் வழங்கும் வைபவம் அண்மையில் வர்த்தக வங்கி யாழ். கிளையில் நடைபெற்றது. முகாமையாளருடன் பரிசில்கள் பெற்ற மாணவிகளையும் காணலாம்.

(C/3686)

புலமைப்பரிசில் - 2002

26வது பரீட்சையில் கூடிய புள்ளி பெற்றோர்

❖ வ. தனுஷன் (யா.இ.ஆ.பா)
❖ மோ. ஜனகன் (மானி.விவேகானந்த வித்)
❖ நி. வாகினி
❖ க. மயூரன் (யா.கொ.இ.ஆ.பா)
❖ த. லக்ஸ்மன்

27வது பரீட்சையில் கூடிய புள்ளி பெற்றோர்

❖ வ. தனுஷன் (யா.இ.ஆ.பா)
❖ ந. லக்ஸ்மன்
❖ ப. சயந்தன் (கோண்.இ.மா.வித்)
❖ க. டிலக்ஷன்
❖ இ. ஹஸ்தனி (யாழ்.இ.ம.ஆ.பா)

BOND
யாழ்.நகர்

(C/3682)

மில்க்வைற்
மக்கள் மனதில் மங்காப் புகழ் பெற்றது!
மில்க்வைற் சோப் இன்டஸ்றியல்ஸ்
527, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 3541

உடன்தேவை

கொம்பியூட்டர்
❖ ரைப்செற்றிங்
❖ பேச்மேக்கர்

தெரிந்த பெண்கள் உடன் தேவை. இன்று அல்லது நாளை காலை 10 மணிக்கு சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

நிர்வாகம்
வலம்புரி
15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.

வரவேற்கின்றோம்

யாழ்ப்பாணம் வருகைதந்துள்ள
மாவட்டம் 306B ஆளுநர்
லயன் உபாலி சமரசிங்க MJF
அவர்களுடைய
லயன் சீமாட்டி சாந்தி அவர்களையும்
ஏனைய லயன்ஸ் கழக பிரமுகர்களையும்
அன்புடன் வரவேற்கின்றோம்.

LIONS INTERNATIONAL

பிராந்திய தலைவர்
பிராந்தியம் 10
வலயத்தலைவர்
வலயம் 01

2001/2002
306 B SRI LANKA
SERVE TODAY FOR A BETTER TOMORROW

கழகத் தலைவர்கள் அங்கத்தவர்கள்
சுன்னாகம், கோப்பாய், மானிப்பாய்,
கோவிற்பற்று, நல்லூர், வட்டுக்கோட்டை
லயன்ஸ்கழகங்கள்.

உ
சுவாமியே சரணம் ஐயப்பா

இலங்கை அரசாங்கமும்
விடுதலைப்புலிகளும்
செய்து கொண்ட
சமாதான ஒப்பந்தம் வெற்றி பெறவும்
நாட்டில் வரட்சி நீங்கி, நல்ல மழை பொழியவும்
அமைதி, சாந்தி, சமாதானம் நிலவ இறையருள் வேண்டி
சபரிமலை ஸ்ரீ ஐயப்ப சுவாமிக்கு

விஷேட திரவ்ய ஹோம மஹா யாகம்

இடம்: ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்
தம்பையா சத்திரம், கொச்சிக்கடை (30. சென். அன்ரனீஸ் மாவத்தை)
நாள்: இன்று (09.03.2002) சனிக்கிழமை
நேரம்: மாலை 6.00மணிமுதல் 8.00மணிவரை

கப்பித்தாவத்தை ஸ்ரீ பாலசெல்வவிநாயகர் ஆலயபிரதமகுரு
'சிவாகம பூசணம்' பிரம்மஸ்ரீ.பா.ஷண்முகரெட்ணசர்மா J.P
'பிரதிஷ்டா சிரோமணி' நவாலியூர்
பிரம்மஸ்ரீ.சாமி விஸ்வநாதக் குருக்கள்
அவர்களின் அருளாசியுடன்
''சர்வதேச இந்து மத குருபீடாதிபதி''
கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் J.P
அவர்களின் தலைமையில் கிரியைகள் நடைபெறும்.

தேவஸ்தான பிரதமகுரு
'கிரியகலாமணி' சிவஸ்ரீ.சி.தியாகராஜக்குருக்கள்

அனைவரும் வருக!
ஐயப்பன் அருள்பெறுக!!

அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்
சர்வதேச இந்துமத குருபீடம்
(அரச அங்கீகாரம் பெற்ற சமயஸ்தாபனம்)
751/A புளுமெண்டால் ரோட், கொழும்பு - 15
தொலைபேசி:-072-422239, தொலைநகல்:-527025

(C/3683)